முரசொலி
வார இதழ்.
ஆசிரியர் மு. கருணாநிதி.
2 அணா

முரசு 2 | சென்னை | 12—8—55 | வெள்ளி | ஒலி 20

# டி. டி. கே.யின் 'பல்டி'கள்!

[பதவி தேடுவதும், 'பல்டி' அடிப்பதும், புதுக் காங்கிரஸ்காரர்களைப் போலவே டி. டி. கிருஷ்ண மாச்சாரி அவர்களின் இரத்தத்தோடும் கலந்திருக்கிறது! அதைத்தான் சிரிக்கவைத்து சித்திரம் தீட்டும் 'சங்கர்ஸ் வீக்லி' பத்திரிகை இப்படி படம் பிடித்துக் காட்டுகிறது.]







## கோவா - கொடுமை! [தலையங்கம்]

Best copy available




அன்புள்ள குமார்,

நீயும் நானும் அதிசயிக்கத்தக்க விதத்திலே இந்தியை எதிர்க்கும் கணைகள் எதிர்பாராத இடத்திலிருந்தெல்லாம் பாய்ந்து வந்திருக்கின்றன. நடைபாவாடை விரித்து இந்திக்கு நல்வரவு கூறுவரோ? அன்றி நா அசைக்காது மௌனமாகி விடுவரோ?—என்றெல்லாம் நாம் சந்தேகப்பட்டவர்கள் சமர்க்களம் குதிக்கவும் தயாரென மார்தட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

வேற்றாமல் செங்கோலோச்சிகள் சோம்பித் திரிகின்றனர். ஆனால் 15 ஆண்டுகள் 'தவணை' விதிக்கப்பட்டிருக்கும் கட்டாய இந்தியை நுழைப்பதற்கோ கடுமையான நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இது ஏன்? இந்த ஏற்றத் தாழ்வு தகுமா? முறையா?—என்று இடித்துக் கேட்டிருக்கிறார் லட்சுமணசாமி முதலியார்.

'ஆங்கிலம் எப்படி அன்னிய மொழியோ, அதுபோல இந்தியும் எங்களுக்கு அன்னிய

# ★ ஓங்கட்டும், 'எதிர்ப்பு உணர்ச்சி'! ★

நாராயணசாமிப் பிள்ளையைப் பற்றி உனக்குத் தெரிந்திருக்கும். அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மட்டுமல்லாமல், பழுத்த சிவபக்தர் என்பதையும் நீ கேள்விப் பட்டிருப்பாய். தில்லையிலே ஆடும் சிதம்பரக் கடவுளின் கும்பாபிஷேகத் திருவிழாவை முன்னிட்டு, பல்கலைக் கழகத்தையே ஒருவாரத்துக்கு மூடிவைத்து பெருமை பெற்ற சீலராயிற்றே, அவர்! அவர்தான் மேல்சபையிலே சென்ற கிழமை முழக்கமிட்டிருக்கிறார்:

"போட்டிப் பரிட்சைகளில் தென்னாட்டு இளைஞர்கள் கலந்து கொள்ள முடியாத நிலையை இந்திய சர்க்கார் கடைப் பிடிக்கக்கூடாது...... வட்டார மொழியிலும், இந்தி மொழியிலும் நாம் கொண்டுள்ள ஆர்வத்தினால், ஆங்கில மொழியின் மதிப்பையும் நாம் மறந்துவிடலாகாது.....இந்தி போதனா மொழியாகவோ, பரிட்சை மொழியாகவோ ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது"

— இவையெல்லாம் அவர் உதிர்த்திருக்கும் சத்தான கருத்துக்கள்.

இவரைவிட ஒருபடி அதிகமாகவே சென்று லட்சுமணசாமி முதலியார் இந்தி வெறியர்களின் பிடரியைப் பிடித்து ஆட்டியிருக்கிறார். இந்தி கட்டாயமாக தென்னாட்டவர்மீது திணிக்கப்படும் மூன்றுவித முயற்சிகளை அவர் படம்பிடித்துக் காட்டியிருப்பதை யாரும் மறுக்க முடியாது.

முதலாவதாக; சகல மொழிக்காரர்களும் திரண்டிருக்கும் டெல்லி பாராளுமன்றத்திலே இந்தி வெறியர்கள் மற்றவர்களுக்கு விளங்காத இந்தியிலேயே பேசுகிறார்கள்.

இரண்டாவதாக; மத்திய அரசாங்கப் பணியாளர்களாக இருந்துவரும் தென்னாட்டவர்கள், மாலை நேரங்களில் நடத்தப்பட்டுவரும் இந்தி வகுப்புகளில் சேர்ந்து இந்தி பயில வேண்டுமென்றும் நிர்பந்தப் படுத்தப் படுகிறார்கள்.

இறுதியாக; இந்திய அரசினர் இரண்டாயிரம் இந்திப் பண்டிதர்களை தென்னகம் அனுப்பியிருக்கின்றனர்.

—இந்த மூன்று வழிகள் மூலம், 'கட்டாயப்படுத்தவில்லை' என்று கூறிக் கொண்டே இந்தி வெறியர்கள் நம் விழிகளைச் சுடுவதாக சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் குறிப்பிட்டார்.

அதோடு இந்தி மொழிப் பித்து பிடித்தோரின் குரல் வளையை நெறுக்கும் விதத்திலே நெருப்புப் பறக்கும் வினாவொன்றையும் அவர் விடுத்திருக்கிறார்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலே 45-வது பிரிவின் படி, இன்னும் பத்து ஆண்டுகளுக்குள்ளாக பதினான்கு வயது முடிவு பெறாத எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி வழங்க ஏற்பாடுகள் நடைபெற்றாக வேண்டுமென்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

எப்படி இந்தியைப் பொது மொழியாக்க 15-ஆண்டுகள் கால வரம்பு விதித்திருக்கிறார்களோ, அதுபோலவே கட்டாய இலவசக் கல்விக்கும் 10ஆண்டுகள் 'தவணை' தந்திருக்கிறார்கள்.

ஆனால் கட்டாயக் கல்வியை பெருவாரியான அளவில் நாடெங்கும் அமுல் செய்ய அவசரம் காட்டப்படவில்லை. பத்து ஆண்டுகளுக்குள் செய்து முடிக்கப்படவேண்டுமென்று அரசியல் சட்டம் செப்புகிறது. அதை நிறை

மொழிதான்' — என்று திட்டவட்டமாகச் சொல்லி விட்டார், துணைவேந்தர்.

கட்டாய இந்தியை எதிர்த்து குரல் கொடுத்திருக்கும் நாராயணசாமிப் பிள்ளை யார்? அவருக்கும் நமக்கும் எவ்வளவோ தூரம்! சமுதாய, அரசியல் பிரச்னைகளிலே நம்மைக் கண்டதும் தூர ஓடிவிடுவார், அவர்! லெட்சுமணசாமி முதலியாரும் அப்படித்தான். திராவிடநாடு திராவிடருக்கே—என்று சொல்லிப் பாருங்கள்! செவிகளை மூடிக் கொள்வார்!

ஆனால் அவர்களெல்லாம் இன்று. இந்தியை எதிர்த்து ஆர்ப்பரித்துக் கிளம்புகிறார்கள். இந்திக்கு எதிர்ப்புக் காட்டுவோர் இவர்கள் மட்டுந்தானா? இல்லை; நாடெங்கும் இருக்கிறார்கள், நஞ்சாம் இந்தியை நசுக்க நினைக்கும் நல்லவர்கள்! இதோ, ஜூலை-30-ம் தேதிய 'இந்து' இதழைப் பார்!

இந்திய அரசினர் புதிய நாணய முறையை நடைமுறைக்குக் கொண்டுவரப் போவது உனக்குத் தெரிந்திருக்கும். ஒரு ரூபாயை நூறு பிரிவுகளாக்கி வெளியிடப் போகிறார்கள். பொதுவாக அந்தப் பிரிவுகளை 'செண்ட்' கள் என்று அழைக்க வேண்டுமென்பதுதான் இன்று நாட்டிலே நிலவிவரும் பெரும்பான்மையோர் எண்ணம். ஆனால் இந்திய அரசினர் அந்தப் புது நாணயங்களில் இந்தி எழுத்துக்களைப் பொறிக்கப் போவதோடு அல்லாமல், இந்திப் பெயர்களையும் சூட்டப் போகிறார்கள். அது குறித்துத்தான் 'இந்து' இதழில், லெப்டினன்ட் கர்னல் சி. ஆர். கிருஷ்ணசாமி என்பவர் கடிதம் எழுதியுள்ளார்:

"எழுதப் படிக்கத் தெரியாத எல்லோருக்கும் எளிதில் விளங்கும் அராபிய

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

## ஈழத்தின் வரவேற்பு !

இலங்கை
1—8—55

அன்புடையீர்,

'முரசொலி' ஆங்கிலத்திலும் வெளிவரப் போகிறது என்ற செய்தியை இவ்வார 'முரசொலி' யில் கண்டேன். உண்மையில் பூரிப்பு நிறைந்த செய்திதான் அது. கழகக் கருத்தைத் தாங்கி வெளிவரும் நல்ல ஆங்கில இதழ்கள் இல்லாமை இயக்க வளர்ச்சிக்குப் பெருங்குறையாக இருந்து வருகிறது. அக் குறையை நல்ல வகையில் ஆங்கில முரசொலி தீர்த்து வைக்கும் என்று நம்புகிறேன். ஆங்கிலப் பதிப்புக்கு இலங்கையில் நல்ல செல்வாக்கு ஏற்பட இடமுண்டு. இலங்கை அரசாங்க உத்தியோகங்களில் அமர்ந்திருக்கும் இளைஞர்களில் பெரும்பாலோர், கழகக் கொள்கைகளில் கருத்துடையோராக இருக்கின்றனர். அவர்களுக்கு நிச்சயம் ஆங்கில முரசொலி விருந்தாக அமையும்.

இங்ஙனம்,
**எஸ். டி. சிவநாயகன்,**
ஆசிரியர்: "சுதந்திரன்"

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 12—8—55 வெள்ளி

## கோவா - கொடுமை !

கோவாவிலே கொடுமையாளர் தர்பார் நடந்தபடி இருக்கிறது. ஏகாதிபத்ய வெறி தலைக்கேற; உடல் நோகாமல் உயிர் வளர்க்கும் மனப்பான்மை மத்தளம் கொட்ட; 'அய்யோ! அடுக்குமா இது?' என்று உலகத்தவரெல்லாம் கண்களை மூடிக்கொள்கிற அளவுக்கு போர்த்துகீசியர் 'கவந்தக் கூத்து' ஆடுகிறார்கள். மண்டை உடைபட்டோர்—கெண்டை விழிமாதரை விதவைகளாக்கியோர்—தொண்டைக் குழி அடைபட கண்ணீர்விட்டு விம்மி அழும் தாய், தந்தையரைத் தவிக்க விட்டோர்—இவர்களது பட்டியலை பெருக்கி வருகிறது சலாசர் என்னும் சர்வாதிகாரியின் சதிக்கூட்டம்!

பதினாறும் நூற்றாண்டின்போது, பீரங்கி வேட்டுகள் முழங்க, கோவா நகரைக் கொள்ளையடித்த ஆல்புகர்கின் பேரக் குழந்தைகள் தங்கள் 'பரம்பரைத் தொழிலை' தொடர்ந்து நடத்துகின்றனர். இயற்கையிலேயே அவர்கள் கடற்கொள்ளைக்காரர்கள்; கொலை செய்வதும், குழந்தைகளின் கழுத்தை நெறிப்பதும் அவர்களது குடும்பத் தொழில்! இருபதாம் நூற்றாண்டு அரும்பியும் அவர்கள் காட்டுமிராண்டிகளாகவே வாழ்வது உண்மையிலேயே வேதனையளிக்கும் செய்தியாகத்தான் இருக்கிறது. கொடுமைக்குப் பெயர் பெற்ற ஆங்கிலேயர்கள் செய்வதற்கும் வெட்கப்பட்ட நடவடிக்கைகளையெல்லாம், வீரமென்ற பெயரிலே அவர்கள் நடத்திக்காட்டும்போதுதான் நம் நெஞ்சம் துணுக்குறுகிறது! இந்தக் காட்டு ராஜா தர்பார் நடத்திய கண்மூடிச் செயல்களின் பட்டியலை, இதோ, கீழே தருகிறோம்.

★ ஜனவரி 26-ந் தேதியன்று 234 சத்யாகிரகிகள் இரக்கம் சிறிதுமின்றி தடியடிக்கு ஆளானார்கள். எண்பது வயது நிரம்பிய சிவராம் பார்வே என்னும் தள்ளாத கிழவர் குருதி வெள்ளத்திலே மிதக்கவிடப்பட்டார!

★ டாக்டர் கைத்தாண்ட் என்னும் தலைவர் வீண் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு போர்ச்சுகல் தலைநகராம் லிஸ்பன் நகருக்கு அனுப்பப்பட்டார்.

★ பிப்ரவரி 23-ம் தேதியன்று கோவாவை அடுத்த குக்கிராமமொன்று வெறிபிடித்த போலீஸ்காரர்களால் சோதனையிடப்பட்டு, பச்சைச் சிசுக்களும், தாய்மார்களும்கூட சித்ரவதை செய்யப்பட்டனர்!

★ மார்ச் 21-ம் தேதியன்று டான்னி டிசுஷா என்னும் தோழருக்கு போர்ச்சுகல் இராணுவ கோர்ட்டார் இருபத்தெட்டு வருஷம் கடுங்காவல் தண்டனை விதித்து கொடுமையின் எல்லையிலே நின்று கொக்கரித்தனர்.

★ ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் சுதந்தர கோஷங்களை விண்முட்டும் அளவுக்கு ஒலித்துக் கொண்டிருந்த வாசுதேவ் பிரபு என்னும் வாலிபர் உடல் கன்னிப் போகிற அளவுக்குக் கடுமையான கசையடிகளைப் பெற்றார்.

★ ஏப்ரல் 9-ம் தேதியன்று, தயானந்த் கெனி, நாராயன் ஆன்கிஸ், கானு—என்னும் தொண்டர்கள் ஆபத்தான நிலையிலே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

★ மே மாதம் 18-ம் தேதியன்று 54-பேர் கொண்ட சத்தியாக்கிரக கோஷ்டிமீது மிருகவெறி பிடித்த போர்த்துகீஸ் போலிசார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினார்கள்.

★ அதே நாளன்று சேனாபதி பாபட் என்பவருடைய விலாவெலும்புகள் முறிக்கப்பட்டு, தலையிலேயுள்ள குடுமி பிய்த்தெறியப் பட்டதால் இரத்த காயங்களும் பெற்றார்.

★ மே 21-ம் தேதியன்று பம்பாய் நகரில் பேசிய பீட்டர் ஆல்வேரிஸ் போர்த்துகீசியரது சிறைச் சாலைகளிலே 2,00—பேர்கள் சித்ரவதை செய்யப் படுவதாகக் கணக்கு காட்டினார்.

★ ஜூன் 28-ம் தேதியன்று தொண்டர் சிலரது தலை மொட்டையடிக்கப்பட்டு, பாதத்திலே உள்ள தோல், ரேஸர் பிளேடுகளால் பிய்த்தெறியப்பட்டது.

★ ஜூன் 30-ம் தேதியன்று போலீஸ் தடியடிக்குள்ளாகிய எஸ். எம். நந்தேகர் என்பவர் அநேகமாகத் தன் கண் பார்வையை இழந்தார்.

★ ஆகஸ்ட் 3-ந் தேதியன்று தொண்டர்கள் இருவர் மனிதத் தன்மையை மறந்த கூட்டத்தாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவைதான் போர்ச்சுகீசியப் போர் வெறி காண்டத்திலேயுள்ள ஒரு சில வரிகள்! இட்லரும், முசோலினியும் செய்ய மறந்ததை; ஸ்மட்சும், மலானும் நெஞ்சு கூசி கைவிட்டதை சாதித்துக் காட்டுகிறது சலாசர் கும்பல்! அடக்குமுறைக்கு இலக்கணம் வடிக்கிறது ஆதிக்க வெறிக்கூட்டம்!

இத்தனையும் செய்து வருகிற சூதுமதியினர்தான் செப்புகிறார்கள்—'கோவாப் பிரச்னையை ஐ. நா. வுக்கு எடுத்துச் செல்வோ'மென்று! இத்தகைய செயல் நகைப்புக்குரியது; வெளி நாட்டவரின் ஆத்திரத்தைக் கிளறுவது என்றுகூட எதிர்பாராமல், அதிகாரப் புழுதி மேட்டிலே விழுந்து புரண்டுகொண்டிருக்கும் போர்ச்சுகலின் போக்கு நம்மால் புரிந்து கொள்ளாத நிலையில்தான் இருக்கிறது!

உரிமைக்கொடி பறக்கவிடுவோரின் உடல்தோலை அடிமை கொள்ள நினைப்போர் உரித்தெடுக்க நினைப்பதென்பது நமக்கொன்றும் புதியதல்ல—தேசியத் தோழர்களே நம்மை பல சமயங்களில் அக்கினி குண்டத்திலே தூக்கி எறிந்துவிட்டு, சுதந்தரதேவியின் அழகை ரசித்திருக்கிறார்கள்!

நாமே அனுபவித்திருக்கிறோம்; நம்முடைய மாநிலத்திலேயே ஆச்சாரியார் வடிவில்-ஓமந்தூரார் உருவத்தில் சலாசர் தோன்றியிருக்கிறார்! எனவேதான் நாம் தியாகத் தழும்புகளைத் தடவியபடியே கோவாவிலே அவதிப்படும் கொள்கை வீரர்களதுபக்கம் உரிமையோடு, மற்ற யாருக்கும் இல்லாத பாச உணர்ச்சியோடு—நம்முடைய இரங்கற் பார்வையைத் திருப்ப முடிகிறது.

கோவாவிலே கேட்கும் குமுறல் ஒலி நம் காதுகளைக் குடைகிறது! இது, கொட்டு முழக்கம், வரவேற்பு கோஷங்களும் வானைப் பிளக்கும் அளவுக்குக் கேட்டு மகிழ்ந்த நேருவின் காதுகளிலும் விழுகிறது!—ஆனால் அவரோ அமைதியாக இருக்கிறார்!

அன்றொரு நாள் — ஹைதாராபாத்திலே ராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது. இன்று அந்நியர் கையிலே சுதந்திர வீரர்கள் சிக்கிச் சீரழிகின்றனர். நேரு மௌனம் சாதிக்கிறார். காரணம் என்ன?

மாபெரும் ஆர்பாட்டமொன்று நடத்தி, பாராளுமன்றத்தின் கதவுகளைத் தட்டியபோது கூட அவர் பதுமையாகவே காட்சி அளிக்கிறார்—அவ்வப்போது சிற்சில வார்த்தைகளை உதிர்க்கிறார்; வாயை மூடிக் கொள்கிறார்—இது அவரது வழக்கமாகிவிட்டது!

அவருடைய பண்பு தெரிந்தோர்க்கு இதுவொன்றும் புதிதல்ல! காரை புதுவைப் பகுதியிலே போர் முழக்கம் கேட்டபோது எங்கேயோ இருந்துவிட்டு, பின்னர் பொதுமக்களாகவே பிரெஞ்சுக்காரர்களைத் துரத்தியடித்த பிறகு மாலை வாங்கிக்கொள்வதற்காக மட்டும் பாண்டிச்சேரி வந்து போனவர்தானே, அவர்! இந்த நேரத்தில் அவர் இதையெல்லாம் கவனிப்பாரென்று நினைத்தால் அது தவறுதான்!

கோவாவிலே குருதி வெள்ளம் கொட்டும் வீரத்தின் சிகரங்களே! வேழம் நிகர்த்த வலிவு கொண்டோரே! உங்களை திராவிடம் வாழ்த்துகிறது. நீங்கள் அன்னிய நாட்டானை விரட்டுவதற்காக கையிலே வேல் தூக்கி களத்திலே குதித்திருக்கிறீர்கள். நாங்களோ எம்மை மிதித்து நசுக்கும் வடநாட்டு ஆதிக்கத்தைத் தூக்கி எறிவதற்காகத் தோள்தட்டி நிற்கிறோம். நம் நோக்கம் ஒன்றுதான்; எனவே பகைவரைத் தாக்குவதற்கு நாங்கள் தரும் ஊக்கத்தைப் பெறுவீர்!—என அவர்களை நாம் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதே நேரத்தில் சலாசர் போன்ற சர்வாதிகார சன்னிதானங்களுக்கும் நாம் நினைவுபடுத்த வேண்டியதொன்று இருக்கிறது. அடக்குமுறை தர்பார் நடத்தும் ஆணவப் பதர்களே! ஆடுமேய்த்து அழிந்துவிடும் அருகம்புல் அல்ல உரிமை முழக்கம்! காட்டுக் குதிரையும் அல்ல, கடிவாளம் இட்டதும் காலடியில் பணிந்துவிட! அது அசைக்க முடியா இமயம்! வெட்ட வெட்டத் தளிர்விட்டுத் தழைக்கும் தன்மை கொண்ட தரு! எனவே அதை அடக்காதீர்—அழிந்துவிடுவீர்!

—சரித்திரம் தந்த இந்தப் பாடம் படித்தாவது வெறியர்கள் போக்கு மாறுமென்று எதிர்பார்க்கிறோம்!

One side page dark



# நில், நண்பா! எங்கே ஓடுகிறாய்?

"என்னப்பா, தமிழரசு! எங்கே இவ்வளவு வேகமாகப் போகிறாய்? போருக்கு ஆயத்தம் செய்யப் போகிறாயா?"

"ஆமாம்; கொஞ்சம் அவசரமான வேலை!"

"போர் என்றாயே, நாள் குறித்தாகிவிட்டதா? வேல் தயாராகிவிட்டதா? சத்யாகிரகமா? உண்ணாவிரதமா? களம் எங்கே; தெற்கா? வடக்கா?"

"அது என்ன, நீங்கள் தொடுத்த போரென்று நினைத்துக் கொண்டாய், ஏழெட்டு நாட்களில் போர்முரசம் தட்டி, ஐயாயிரம் பேரைத் திரட்டுவதற்கு?"

"அப்படியானால் உங்கள் போரிலே புதுமை என்னப்பா?"

"போர் முழக்கம் கேட்டுக் கொண்டே இருக்கும்; ஆனால் ஒலி எங்கேயிருந்து வருகிறது என்று யாருக்குமே தெரியாது! ஒரே நொடியில் காமராசரைக் கவிழ்த்துவிட்டு, ஆந்திரா மீது படையெடுத்து, கோபால ரெட்டியாரை . சட்டியிலே இட்டு ரொட்டி தட்டி..."

"சரிதான்! காந்தியவாதி என்கிறாய்; கனல் தெறிக்கப் பேசுகிறாயே! ஆமாம்; இதையெல்லாம் எப்போது செய்யப் போகிறாய்?"

"செய்து முடித்து வெற்றி விழாக் கொண்டாட வேண்டிய வேலை தான் இது! ஆனால்...?"

"ஆனால் என்ன? அய்யர் குறித்த முகூர்த்தம் தவறி விட்டதா?"

"அது அல்லப்பா! ஆசியாவின் ஜோதி இருக்கிறாரல்லவா?"

"ஆமாம்; அந்த ஜோதியில் உங்களைச் சூழ்ந்திருந்த இருட்டு ஓடிவிட்டதா?"

"அதுதானே இல்லை! எங்கள் தலைவர் ஓங்கியிருந்த வாளை முடிசூடா மன்னர் தடுத்து நிறுத்திவிட்டார்! வெடி மருந்துக்கு நெருப்பு வைக்கிற வேளையிலே மோதிலால் மைந்தர் மழையாகப் பொழிந்துவிட்டார்..."

"த்சு! த்சு! அந்தோ பாவம்! உங்கள் தினவெடுத்த தோள்களெல்லாம் சுருங்கிக் கருவாடாகப் போயிருக்குமே! பாவம்! நேரு என்னதான் செய்தார்?"

"அதைத்தான் அப்போதே சொன்னேனே! தடுத்து நிறுத்தி விட்டார் எங்கள் போராட்டத்தை!"

"ஓகோ! அதற்காகத்தான் நேரு அவசர அவசரமாக தன்னுடைய ரஷ்ய விஜயத்தை முடித்துக்கொண்டு வந்தாரோ! இருக்கலாம், இருக்கலாம்! சரி; போராட்டம் கைவிடப்பட்ட கதையைக் கொஞ்சம் விபரமாகத்தான் சொல்லேன்!"

"நேரு எங்கள் தலைவருக்குக் கடிதம் எழுதிவிட்டார்!"

"நேருவே எழுதினாரா? அல்லது அவருடைய அலுவலகத்தில் பணிபுரிபவர் யாராவது எழுதினார்களா?"

"நேருவே எழுதியதாகத்தான் சொன்னார்!"

"யார்?"

"எங்கள் தலைவர்!"

"அப்படியானால் கடிதத்தை நீ பார்க்கவில்லையா? ஏன் இப்படி உதட்டைப் பிதுக்குகிறாய்? அட, உடனே சிரிக்கிறாயே?"

"சிரித்து மகிழாமல் என்ன செய்வேன்; நேருவே எங்கள் தலைவருக்கு எழுதியிருக்கிறார்!"

"சிறிது நேரத்திற்கு முன்பு, யார் எழுதியது என்று திட்டவட்டமாகத் தெரியவில்லை; நேரு எழுதியதாகத்தான் எங்கள் தலைவர் சொல்ல எனக்குத் தெரியும்-என்று சொன்னாய்! இப்போது நேருவே எழுதியதாகச் சொல்கிறாயே!..."

"யார் எழுதினால்தான் என்ன? டெல்லி வரைக்கும் எங்கள் குரல் போய்விட்டதே; அது போதாதா?"

"அட அப்பாவி!"

"என்னப்பா அப்படிச் சொல்கிறாய்?"

"கேள் கதையை — எங்கள் ஊரில் இராணுவத்திலிருந்து திரும்பி வந்தவனொருவன் இருந்தான். வேலை கிடைக்காமல் அலைந்தான். கடைசியில் ஒரு நாள் வேலை வேண்டுமென்று நேருவுக்குக் கடிதம் எழுதினான்..."

"அதற்கெல்லாம் நேரு பதில் போட்டிருக்க மாட்டாரே — எங்கள் தலைவர் போன்ற பெரிய புள்ளிகளுக்குத்தான் அவர் பதில் எழுதுவார்!"

"அப்படித்தான், நண்பா, அதுவரைக்கும் நானும் நினைத்தேன்! ஒரு நாள் அவன் ஓடி வந்து என்னிடம் சொன்னான், 'நேரு எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்'...என்று!"

"அப்படியானால் நேரு அவனுக்குக் கடிதம் எழுதினாரா?.. ஹாங்!"

"ஆச்சரியப்படாதே! நேருவுக்குப் பதிலாக வேறொருவர்—அவருடைய சொந்த அலுவலகத்தில் பணிபுரிபவர்-செகரெட்டரிக்கு செகரெட்டரி என்போமே—அதைப் போன்றவர் கடிதம் எழுதியிருந்தார். என்ன தெரியுமா? 'உங்களூரிலுள்ள 'எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில்' பதிவு செய்து கொள்ளுங்கள்—வேலை கிடைக்கும்'— என்று! இதைத்தான், நண்பா, அவன் நேருவிடமிருந்து தனக்கென்று பிரத்யேகமாக வந்த கடிதமென்று பீற்றிக்கொண்டு திரிந்தான்! அந்தக் கடிதம் வந்த பெருமையில் வேலை கிடைக்காத வேதனையைக் கூட கொஞ்சநாள் மறந்திருந்தான்!"

"ஆமாம்; அதற்கும் நாம் பேச வந்ததற்கும் என்ன சம்மந்தம்?"

"நிறைய இருக்கிறது. உன் தலைவருக்கு வந்த கடிதமும், எங்களூர்த் தோழனுக்கு வந்த லிகிதத்தைப்போல, யாரோ நேருவுக்கு 'செகரெட்டரிக்கு செகரட்டரி' வரைந்ததாக இருக்கலாமல்லவா? வேலை கிடைக்காது வாடிய அந்த பரிதாபத்திற்குரியவனைப்போல உன் தலைவரும் அந்தக் கடிதத்தை நேருவே எழுதிய கடிதமென்று உனக்குச் சொல்லியிருக்கலாமல்லவா?"

"சரி; சரி! எனக்கு வேலையிருக்கிறது; வருகிறேன்..."

"நான் சொல்வதை யோசித்துப் பார்! வேண்டுமானால் முக்காலணா கார்டு ஒன்று எழுதிப் போடு; பதில் வரும். உடன் நீயும் 'எனக்கு நேருவே கடிதம் எழுதியிருக்கிறார்' என்று சொல்லிக் கொள்ளலாம்"

"சரி; அவ்வளவு தானே?"

"கோபிக்காதே! ஒரு விளக்கம்-உன் தலைவருக்கு நேரு எழுதியதாகச் சொல்லப்படும் கடிதம் எப்படிப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் கேட்கிறேன். அவ்வளவு ஏன்? நேருவின் கடிதத்தை அவர் பத்திரிகைகளில் விபரமாகப் பிரசுரம் செய்தால் என்ன, நண்பனே!......என் போன்றவரது சந்தேகமும் நீங்கிப்போகுமே! அடடே! எங்கே போய் விட்டாய்?"

★

## நமது நடவடிக்கைகள்!

*ஒவ்வொரு நாளும் சில மணி நேரம் தூங்குகிறோம்—சில மணி நேரம் வேலை செய்கிறோம்—சில மணி நேரத்தில் மற்ற மற்ற வேலைகளும் நடைபெறுகின்றன. ஆனால் நமது வாழ்நாளில் அந்த 'சில மணி' நேரங்கள் எத்தனை எத்தனை ஆண்டுகளாக உருவாகின்றன? இதற்கான விடை, 'ஏதோ ஓடிக்கொண்டிருக்கிறது வாழ்க்கை!' என்ற எண்ணமுடையோருக்கு பெரும் அதிர்ச்சியைத் தரச் செய்யும்.*

*66 ஆண்டுகள் வாழ்வதாக ஒரு மேலைநாட்டுக்காரனின் வாழ்க்கையைக் கணக்கிட்டதில், ருசிகரமான உண்மைகள் புலப்பட்டிருக்கின்றன. அந்த 66 ஆண்டுகளில், அவன்* 20 ஆண்டுகள் தூங்குகிறான் — 14 ஆண்டுகள் வேலை செய்கிறான்—விளையாட்டில் 8 ஆண்டுகள் செலவிடுகிறான்—5 ஆண்டுகள் பிரயாணம் செய்கிறான் — உரையாடலுக்காக 5 ஆண்டுகளும், படிப்பதற்காக 3 ஆண்டுகளும் கழிகின்றன. மற்றும், சாப்பிடுவதற்கு 6 ஆண்டுகள்—நோய்ப் படுக்கையில் 3 ஆண்டுகள் — புகை பிடிக்க 2 முதல் 4 ஆண்டுகள்—டெலிபோனில் பேச ஓராண்டு — இந்த அளவில் அவனது வாழ்க்கை நடைபெறுகிறதாம்!

*புள்ளி விபரம் காட்டும் இந்த உண்மையை, நம் நாட்டு வாழ்க்கைத் தரத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால்......?*

*வறுமையின் அரவணைப்பில், வாழ்வேட்டின் பெரும் பகுதியில் சோகக் காவியம் தீட்டும் ஏழையர் குலம், நோய்ப் படுக்கையில் மூன்றே ஆண்டுகள்தான் கழிக்குமா? இருக்காது!*

*எண்பது சத விகிதத்திற்கும் மேலாக எழுதப் படிக்கத் தெரியாதோர் குவிந்திருக்க—குறை கல்வி கற்ற மற்றோரும் ஓய்வு நேரப் படிப்புக்கு முழுதாக மூன்று ஆண்டுகள் செலவிடுவார்களா என்று எந்தக் கணக்காலும் காட்ட முடியாது!*

*ஆனால், சில செயல்களில் அவர்கள் மேலை நாட்டுக்காரனின் அந்தக் கணக்குக்குச் சவால் விடலாம்!*

*தூங்குவதிலே 20 ஆண்டுகளை மீறிக் காட்ட முடியும்!*

*நேரம் வாய்த்த போதெல்லாம்—எதிரே ஆள் கிடைத்த நேரமெல்லாம்—வேண்டாத கதை பேசுவோர் இங்கு மலிவு! ஆகவே உரையாடல் காலமும் அதிகரிக்கும்!*

*மேலை நாட்டுக்காரன் காட்டும் புள்ளி விபரத்திற்கும், நம் நாட்டு வாழ்க்கை ஓட்டத்திற்கும் அத்தனை வேறுபாடு ஏன்?*

*யோசித்தால் புலப்படும், நம் நாட்டுக்காரர்களின் வாழ்வுக் காலத்திலே* **'சிந்திப்பதற்கு'** *ஆண்டுகளை அல்ல; மாதங்களையோ—நாட்களையோகூடக் காணோம்!*

# வெள்ளி இரவு!

முல்லை சக்தி

அன்று மாலைதான் அந்த நகரில் நான் காலெடுத்து வைத்தேன். இளம் வயதிலேயே உள்ளத்தில் பல வேதனை வேல்கள் தாக்கப் பட்டதால், போக்கிடமின்றி நாடோடியானேன். உற்ருரோ-உறவினரோ-உற்ற நண்பர்களோ இல்லை எனக்கு. இந்தப் பரந்த வையகத்தில் நான் தனி மனிதன். அன்றிரவு அந்த நகரம் என் தங்குமிடமாயிற்று. ஊர்க்கோடியில் கீழ்திசைத்து ஓடும் ஆற்றங்கரை, நான் இளைப்பாற இடமளித்தது. பருவத்தின் பூரிப்பில், பொலிவும் வலிவும் பெற்ற நிலாப் பெண்ணாள், இருளைக் கிழித்து ஒளி வீசிக்கொண்டிருந்தாள். இருண்ட வையகத்தை வெண்மையாக்கிக் கொண்டிருந்தது, வெண்மதியின் தண்ணொளி. கல கலவென சிந்து பாடி ஓடும் ஆற்றின் வெள்ளம், சாய்ந்துவிட்ட பாற்குடத்தின் பாலைப் போல ஓடிக்கொண்டிருந்தது. இருண்ட இரவு அல்ல! வெள்ளி இரவு! வரண்டுபோன என் இருண்ட வாழ்வில் என்று ஒளி வீசும்? வஞ்சிக்கப்பட்ட என் வாழ்வு வளப்படுமா? கொஞ்சிக் குலவி, நெஞ்சிலே ஆசைக் கனலை எழுப்பி, பின் வஞ்சித்துவிட்ட வஞ்சிக்கொடியை — என் வாழ்வைப் பொசுக்கிய விஷப் புயலை— எண்ணி எண்ணி என் நெஞ்சம் பொருமிக்கொண்டிருந்தது. தேன் மொழியில் இன்பமழை பொழிந்து, பின் துன்பத் தீயில் தள்ளிவிட்டு, எள்ளி நகையாடும் தோகையர்களை என்னவென்று அழைப்பது?

எழில் கொழிக்கும் முகத்தைக் காட்டி—விழி வேல்களால் இதயத்தைத் தாக்கி—பவழ இதழ்களால் இன்பக்காவியம் தீட்டி–பின் நம்பியவனை நட்டாற்றில் விட்டுவிட்டு, வேறு ஒருவன் தொட்டுத் தாலிகட்ட இணங்கும் பெண்ணினத்தை என்னவென்று அழைப்பது? பெண்ணினமே வஞ்சகத்தின் வடிவங்கள்தானு? கொடுமையின் உருவங்கள்தானு? பெண்களின் காதலே மின்னலைப் போன்றது! வர்ண ஜாலங்களைக் காட்டி, பின் திடீரென்று மறைந்து விடுகிறது. என் மனதில் உண்டான கடுந் தவிப்புக்குக் காரணம், முற்றுப் பெருத காதல் மட்டுமல்ல; துன்புறுத்தப்பட்ட என் அகம்பாவம் கூடத்தான். செல்வத்தை இழந்தேன், சேல் விழியாளுக்காக! சந்தன நிகர் மேனியாளுக்காக என் அந்தஸ்தை அர்ப்பணித்தேன்! மானம், மரியாதை எல்லாவற்றையும் இழந்தேன், கானம் பாடும் வானம் பாடிக்காக! ஆனுல் நெஞ்சிலே வேலை சொருகிவிட்டு வேறு ஒருவனின் தோளை தொத்திக் கொண்டது அந்தப் பச்சைக்கிளி! நான் நாடோடியானேன். "காதல், காதல்" எனக் கதறி அழுததற்கு எனக்குக் கிடைத்தப் பரிசு நாடோடி வாழ்வு! துன்பச் சுமை குவிந்துவிட்ட என் இதயம் விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தது. அந்த வெள்ளி மணற் பரப்பில் அமைதியில்லாமல் புரண்டுகொண்டிருந்தேன்.

தவழ்ந்து வந்த தென்றல், யாரோ ஒரு துர்ப்பாக்யசாலியின் சோகக் குரலை சுமந்து வந்தது. அந்த வேதனைக் குரல் வந்த திக்கை நோக்கிச் சென்றேன். பொங்கிவரும் வெள்ளத்தின் பக்கத்திலே— அங்கமெல்லாம் குலுங்க கதறிக்கொண்டிருந்தாள் ஒரு நங்கை. இரு சிற்ருறுகள் காவேரியின் வெள்ளத்தோடு கலந்துகொண்டிருந்தன. பால் ஒளியில் அந்தப் பாவையின் பளிங்கு மேனி பளபளவென மின்னியது. சாரைப் பாம்பைப் போன்ற பின்னல்—அவள் அங்கமெல்லாம் பருவத்தின் வண்ணம்.

"தாயே! காவேரி மாதா! கதியற்றவர்களுக்கு—மதி இழந்தவர்களுக்கு தஞ்சமளிக்கும் மாநதியே! வாழ்வு இழந்த என்னையும் ஏற்றுக்கொள்! புண்ணுகிப் போன என் உடல், மண்மாதா மீது புரள முடியாது. உன் மடியிலே என்னை புதைத்துக் கொள்ளம்மா! வஞ்சகர்களும் — கல் நெஞ்சர்களும் — ஏமாற்றுக்காரர்களும் — பொருமைக்காரர்களும் — எத்தர்களும்– பித்தர்களும் வாழும் இவ் வையகத்தில் என்னைப் போன்ற வஞ்சிக்கப்பட்டவர்கள் வாழ இடம் ஏது? வல்லூறுகளுக்கு இடையில் மாடப்புரு-புலிக் காட்டில் மான்- வாழ முடியுமா? நொந்து போனவர்களுக்கு - வெந்து போன உள்ளத்தினருக்கு— வஞ்சிக்கப் பட்டவர்களுக்கு -வாழ்வைப் பறிகொடுத்தவர்களுக்கு புகலிடம் அளிக்கும் அன்னையே! என்னையும் உன் அன்புக் கரங்களால் அணைத்துக்கொள்" என்று கூறிய வண்ணம், வெள்ளத்தை நோக்கிப் பாய்ந்தது அந்தப் புள்ளி மயில்! நான் தாவிச்சென்று அந்தக் காவியக் காரிகையைப் பிடித்துக் கொண்டேன். திடுக்கிட்டுத் திரும்பினுள் அத் தையல். வேதனையும், பயமும் அவளின் வதனத்தில் வட்டமிட்டது.

"அம்மா! ஏன் இந்த 'பாப'ச் செயல்?"

"ஐயா! நான் வாழ்வதே 'பாபம்' என்றுசொல்லுகிறது இந்தப் பொல்லாத உலகம். சல்லாப சுந்தரர்களும்— உல்லாச சீமான்களும் நிறைந்த நீள் உலகில் என்னைப் போன்ற 'இல்லாததுகள்', 'செல்லாத காசுகள்' எப்படி வாழமுடியும்? என்னைத் தடுக்காதீர்கள்; அமைதியை தேடிச் செல்லும் என்னைத் தடுக்காதீர்கள்..." விக்கலுக்கும் — தேம்பலுக்கும் இடையே வெடித்தன வார்த்தைகள்!

"அம்மா! உலகம் ஒரு கடைத் தெரு. அங்கு ரூபா, அணா, பைசாவுக்குத்தான் வேலை...மனிதத் தன்மைக்கு அங்கு வேலை இல்லை. என்ருலும் நம்மைப் போன்றவர்கள் அதை எதிர்த்துப் போராடி—வாழத்தான் வேண்டும். நாம் வாழப்பிறந்தவர்கள்–சாகப் பிறந்தவர்கள் அல்ல!"

"நான் சாகப் பிறந்தவள்..."

"நீ உயிரை மாய்த்துக் கொள்ளும் துயரச் செய்திதான் என்ன? சொல்லம்மா! என்னுல் உன் துயரை—கண்ணீரை — துடைக்க முடியும் என்று நம்புகிறேன். பயப்படாதே-நானும் உன்னைப் போல உலகத்தாரால் ஒதுக்கப்பட்டவன்தான்...வாழ்க்கையிலே வெறுப்புற்றவன்தான்... உன் இதயத்தைச் சுட்டெரிக்கும் வேதனையைக் கூறு"

நீண்ட மௌனத்திற்குப்பின் அந்தபொற்சிலை பேசஆரம்பித்தது.

✱

"ஐயா! நீர் யாரோ; நான் யாரோ! என்ருலும் உம்மிடம் என் கதையை — என் வாழ்வை — சொல்கிறேன். சாவூரின் பாதையிலே காலெடுத்து வைக்க துணிந்து விட்ட நான், என் சீரழிந்த சோக வரலாற்றை கூறுவதில் தவறு ஒன்றும் இல்லை.

"நம் சமூகத்தில் இளம் பெண்ணின் வாழ்க்கை, வீட்டிற்குள் கடுஞ்சிறையாக இருக்கிறது. வீட்டைவிட்டு வெளியேறினுலோ அவள் வாழ்க்கை முற்றும் பாழாகி விடுகிறது. இதுதான் என் வாழ்வு எனக்கு போதித்த பாடம்.

"மழலை மொழி மாருமுன்பே எனக்கு மணஞ் செய்து விட்டார்கள் என் பெற்ருேர்கள். மண் வீடு கட்டி—மர பொம்மை வைத்து விளையாடும் பருவத்தில் என் சங்கு கழுத்தில் தாலியைக் கட்டி விட்டார்கள். பள்ளியில் துள்ளி விளையாட ஒரு தோழன் கிடைத்ததிலே எனக்கு மகிழ்ச்சிதான். என் வாழ்வு மலருவதற்கு முன்பே, மரணதேவன் என் தோழனை என்னிடமிருந்து திருடிச் சென்று விட்டான். நெற்றிக் குங்குமமும் அழிந்தது... என் வாழ்வும் அழிந்தது. சூடும் கொடி முல்லையையும் இழந்தேன். என் வாழ்வின் சுவையையும் இழந்தேன். நாட்கள் நகர்ந்து கொண்டே இருந்தன. நானும் இதழ் விரித்து சிரிக்கும் மலரானேன். கணவனை இழந்த கைம்பெண் என்பதையும் உணர்ந்தேன். என் இதய வேதனையை எப்படி விவரிப்பேன்? நீங்களே எண்ணிப் பாருங்கள்: பருவப் பெண் – இன்பக் கனவுகள் காணும் இளம் வயது— பொன் நகைகளையும், அணிமணிகளையும் அணிந்து—இதழ் ஓரத்தால் புன்னகை தவழ—கண்கள் காவியம்பேச—வண்ணத்திப் பூச்சியைப் போல, ஓடி—ஆடி—பாடி—மகிழ வேண்டிய வாலைக் குமரியை, 'மூலையிலே உட்கார்—முல்லையை சூடிக் கொள்ளாதே—ஆடாதே— பேசாதே'—என்று கட்டளையிட்டால் அவளின் நெஞ்சு வெந்தணல் போல் எரியாமல் என்ன செய்யும்? மனம் நிறைந்தவனை மணந்து— மஞ்சத்தில் கொஞ்சிக் குலாவத் துடிக்கும் துடியிடையாளை, 'மாங்கல்யம் இழந்தவள்–மஞ்சள் பூசாதே—நெற்றியிலே குங்குமம் இட்டுக் கொள்ளாதே' — என்று ஆணையிட்டால் அவளின் இதயம் வெடித்து துடிக்காமல் என்ன செய்யும்? என் நிலையை நீங்களே உணர்ந்து பாருங்கள். அறியா பருவத்தில்—சூதறியா வயதில்— சூறையாடி விட்டார்கள் என் வாழ்வை, என் பெற்ருேர்கள். இரவெல்லாம் கண்ணீரால் தலையணையை நனைக்கும் மகளைக்கண்டு துடித்து ஒருநாள் கண்ணை மூடி விட்டார்கள் என் தாய். என் தந்தையே எனக்குத் தாயுமானுர்.

"காலம் மெள்ள மெள்ள, கானம் இசைத்தவாறே நகர்ந்து கொண்டிருந்தது. வீடே எனக்கு சிறைச்சாலை. பருவத்தின் பூரிப்பால் பொலிவுற்றிருந்த என் உடலைத்தான் சிறை வைக்க முடிந்ததே தவிர, இன்பத்தை உண்ணத் துடிக்கும் என் உள்ளத்தை சிறை பிடிக்க முடியவில்லை. அப்போதுதான் பக்கத்து வீட்டிற்கு ஒருவர் குடி வந்தார். புதிதாக வந்த ஆசிரியர், ஓய்வு நேரத்தில் இசை நாதத்தை எழுப்புவார். அவர் குரலிலே இருந்த இனிமை என்னைக் கவர்ந்தது. காலையில் அவர் பள்ளி செல்லும் வேளையிலும், மாலையில் வீடு திரும்பும் போதும் சன்னலிலே என் முகத்தைப் பதித்து அவரை கண்குளிரக் காண்பேன். வெண்மையால் வாடிய என் இதயத்திற்கு அது சிறிது தண்மையை அளித்தது. காலம் ஓட ஓட, அவர் என்னைக் கண்டு சிரிக்கவும், நான் அவரைக் கண்டு புன்னகை பூக்கும் நிலைமையும் வளர்ந்தது. அவரின் சிரிப்புக்கு பின்னுல் பயங்கரப் பள்ளம் இருப்பதை உணரவில்லை நான். பருவத்தின் பட்டுத் திரை என் கண்களை மறைத்து விட்டது.

"ஒருநாள் நண்பகல். என் தந்தை வயலுக்குப் போயிருந்தார். காலடி ஓசை கேட்டு திரும்பிப் பார்த்தேன். 'அவர்' நின்றுகொண்டிருந்தார். என்ன செய்வதென்றே புரியவில்லை எனக்கு. அவரைக் காண என் கண்கள் துடித்தன. ஆனுல் நாணம் அதைத் தடுத்தது. பயத்தால் என் நெஞ்சு படபடவென்று அடித்தது. நான் சிலையானேன். அவர் அர்ச்சிக்கும் பக்தரானுர்.

"வேணி! என் இதய ராணி! உன் வேதனைக் கதை தெரியும் எனக்கு. உன் பொன்நிகர் மேனி புழுதியில்



...அந்த நாடோடியின் வாழ் நாள் ஒவ்வொன்றும் கரிய இருளாகவே இருந்திருக்கிறது...... ஆனுல், வாழ்விழந்த ஒருத்தியை 'சிரிக்க'ச் செய்த அன்றையதினமோ 'வெள்ளி இர'வாகத் தோன்றுகிறது!...

○ தொடர்ச்சி 8-ம் பக்கம்

# புதையல்

## மு. கருணாநிதி

சென்ற இதழில்.....

போலீசாரிடமிருந்து தன்னை விடுவிக்க முயன்ற பரிமளாவை, துக்காராம் அடுக்களை அறைக்குள்ளே தள்ளிவிட்டான். பரிமளா எதுவும் தோன்றாது திகைத்தாள். அடுக்களைக் கதவை வெளியே தாளிட்டான். மளமளவென்று ஓடிவந்து தெருக் கதவைத் திறந்தான். போலீசாரின் காலில் விழுந்து, "அய்யோ! நான்தான் குற்றவாளி! — துரையை விடுவித்து விடுங்கள்!" என்று கூறி ஓவென அழுதான். போலீசார் அவன் கையில் விலங்கு மாட்டி அழைத்துச் சென்றனர்.

"எழுவானுக்குந் தொழுவானுக்கும் இடையிலே...
காக்கை மூக்கு நிழலிலே...
கள்வர் புகும் வழியிலே...
கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே...
எழுபது கோடி பசும்பொன்... "

### 35.

### சிலந்தி வலை!

எந்தவிதமான கலக்கமுமின்றி அவர்கள் பின்னே துக்காராம் நடந்தான். உலகத்தில் யாரும் செய்திட எண்ணவும் முடியாத அற்புத காரியமொன்றை சாதித்துவிட்ட கர்வத்தோடு அவன் போய்க் கொண்டிருந்தான். அத்தகைய ஒரு பெருந் தியாகச் செயலைப் பாராட்டுவதற்காகவே அரசாங்கத்தார் அவன் கரங்களில் வெள்ளித் தோடா அணிவித்து வீதி வழியே பவனி நடத்திச் செல்வதாகவும் அவன் கருதினான். துக்காராம் போன்ற வாலிபர்களது உள்ளங்களில் இத்தனை மாறுதல் ஏற்படுவது வியப்புக்குரியதுதான். உலக வழக்குகளிலே சில விதி விலக்குகள் தோன்றும்போதுதான் ஒரு சிலர் மட்டுமே நினைவுக்குரியவர்களாகின்றார்கள், எத்தனையோ கோடி பிறந்து மடியும் இந்த ஜெகத்தில்!

சரியாகவோ தவறாகவோ அவளிடத்தில் அவன் ஒரு மாறாத பாசத்தை வைத்துவிட்டான். அம்பலம் காட்டிய மாயையிலே பல தொல்லைகளையும் அனுபவித்தான். அவனுக்கும் உயிர் தப்ப வேண்டுமென்ற ஆசைகள் பல தடவைகள் ஏற்பட்டதுண்டு. ஆனாலும், அவனது பிரேமையின் வடிவமாக எதிரே நிற்கும் பரிமளா, தன்னை வெறுக்கிறாள்; அதே நேரத்தில் தன் உயிருக்காக வேண்டி அவனையே தியாகம் செய்து கொள்ளத் தயாராகி நிற்கிறாள்—என்பதை அவனால் அதிக நேரம் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவனது இதயத்திலே தொங்கிக் கொண்டிருந்த இரக்க சுபாவத்தை உசுப்பிவிடக் கூடிய நிகழ்ச்சியாக மாறிவிட்டது அது.

வெறும் ஆவல்—வெறி—தாகம் என்பவைகள் எல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, தியாக உணர்ச்சி தலைதூக்கி கிளம்பிவிட்டது. அவனை ஆட்டி வைத்த 'மிருகம்' பதுங்கிவிட்டது. துக்காராம் மனிதனாக எழுந்து நின்றான். அந்த மனிதனின் "கடைசி யாத்திரை இதுதானா?" என்றுகேட்பது போன்ற விழிகளோடு, அடுக்களைக்குள்ளே முடங்கிக் கிடந்தாள் பரிமளா. கதவின் வெளித் தாழ்ப்பாள் திறக்கப்பட்டது அம்பலம்உள்ளேவந்தார். அவளதுஇருதயத்து உதடுகள் பொல பொலவென்று "சாபங்"களை உதிர்த்துக் கொண்டேயிருந்தன என்பதற்கு அடையாளமாக அவள் கண்களிலே நீர்முத்துக்கள் உருண்டு கொண்டிருந்தன. அம்பலம் சந்தேகத்தோடும், சிறிது படபடப்போடும் கேட்டார்; "ஏனம்மா! அந்தப் பயலின் வெறிக்கு பலியாகி விட்டாயா?" என்று!

"இல்லை! பலியானது துக்காராம்தான்! என் காதல் வாழ்வுக்காக தன் வாழ்வைப் பலி கொடுத்தவர் துக்காராம்தான்! உங்கள் ஆசை மாளிகையின் அஸ்திவாரத்தை பலப்படுத்துவதற்காக தன் இளமைக் கனவுகளை அழித்துக் கொண்டவர் அவரேதான்!" என்று அழுதாள் பரிமளா.

"என்ன உளறுகிறாய்? அவன் உன்னை உள்ளே போட்டு அடைக்கக் காரணமென்ன?"

"பெரியவீட்டில் நீங்கள் என்னை அடைத்திருக்கிறீர்கள் — என்னை வைத்து லாபம் பெற! அவர் என்னை இந்த அடுக்களையில் அடைத்துப் போட்டார்-என்னைக் காப்பாற்ற !"

"புரியும்படி சொல்!"

"துக்காராம்-தியாகி! தியாகி!! புரிகிறதா இப்போதாவது?"

அந்த மாதிரி வார்த்தைகளையே கேட்டறியாதவர் அவர். ஆகவே பரிமளாவின் உணர்ச்சி மிகுந்த சொற்களில் பொதிந்து கிடக்கும் ஒரு வாலிபனின் வாழ்க்கைக் காவியத்தை அவரால் உணர முடியவில்லை... "உன்னை நான் அடைத்து வைத்திருக்கிறேன் என்றுதானே கவலைப் படுகிறாய் பரிமளா? ஏன் இவ்வளவு சிரமங்களை ஏற்றுக் கொண்டு திரிகிறேன் என்பது உனக்குத் தெரியுமா? எனக்கென்ன அக்கறை வந்தது? எதற்காக துரையை விடுவிக்க நான் இவ்வளவு கஷ்டப்பட வேண்டும்? யோசித்துப் பார் கொஞ்சம்!" என்று சாகசமாகப் பேசினார் அவர்.

"யோசித்தேன்! ஏன் கஷ்டப் படுகிறீர்கள் என்றும் தெரிந்து கொண்டேன்! தியாகம்! இது ஒரு வகை தியாகம்!" என்றாள் அவள், அழுகையை அடக்கிக் கொண்டே!

"இன்றோடு உன் கஷ்டமெல்லாம் தீர்ந்து விடும், பரிமளா!"

"கொன்று விடப் போகிறீர்களா?"

"கொல்வதா?"

"இல்லை; புதையலுக்குப் பலி, கிலி ஏதாவது வேண்டுமோ என்று கேட்டேன்!"

"பைத்யம்! பைத்யம்!! அதல்ல நான் சொல்வது. இன்று உன் காதலன் துரையோடு உன்னை அனுப்பி வைக்கப் போகிறேன். என்ன திகைக்கிறாய்? துரையும் மாயாண்டியும் விடுதலையாகி விட்டார்கள் தெரியுமா?"

அவர் எதிர்பார்த்த அளவுக்கு பரிமளா ஆனந்தக் கூத்தாடவில்லை-இந்த சேதி கேட்டு! ஏனெனில் துக்காராமின் முடிவும், இனிமேல் அம்பலத்தின் ஆட்டபாட்டங்கள் எப்படியிருக்குமோ என்ற நிலையும், அவளைக் குழப்பத்திலே ஆழ்த்தியிருந்தன.

"பயப்படாதே பரிமளா! நாளை துரை இங்கு வருவான். நீயும் அவனும் யார் கண்ணிலும் படாமல் இந்த ஊரை விட்டு வெளியேறி விடலாம். கண்ணுக்கும் காதுக்கு மெட்டாத தூரத்திலே நீயும் துரையும் காதல் வாழ்க்கை நடத்த நானே எல்லா ஏற்பாடுகளும் செய்து தரப் போகிறேன்." என்று கூறிவிட்டு அவள் முகத்தையே பார்த்தார். தங்களின் காதல் வாழ்விலே அவருக்கு அக்கறையில்லாவிட்டாலும், ஏதோ ஒரு சதியை நிறைவேற்றிக் கொள்ள துரையை இங்கு அழைத்து வருவார் என்பதை மட்டும் நிச்சயமாக நம்பினாள் பரிமளா. மருங்கப்பள்ளத்து சிவன் கோயிலுக் கருகே இருக்கிற புதையல் தன் வாழ்வுக்குப் பூகம்பமாக வந்து சேர்ந்ததே யென்று ஏங்கினாள் பரிமளா. நாளை இரவு துரை வந்து விட்டால், எப்படியும் இந்த முரடரிடமிருந்து தப்புவதற்கு ஒரு வழி செய்ய வேண்டுமென்ற முடிவோடு பரிமளா சுருண்டு படுத்துக் கொண்டாள்.

★

பரிமளாவை சந்திக்க முடியுமா? அம்பலம் சொன்னது உண்மையாக இருக்குமா?-என்ற சந்தேகத்தோடு, துரையும் மாயாண்டியும் புதுப்பட்டினம் போய்ச் சேர்ந்தார்கள். போனதும் போகாததுமாக, மாயாண்டி புதையல் ரகசியத்தை மறைத்து வைத்திருந்த இடத்திற்கு ஓடினார். அவர் வைத்தபடியே இருந்த அந்த ரகசியத்தை எடுத்து மடியில் கட்டிக் கொண்டார். துரை திரும்பிவிட்டசேதி கேட்டு அவன் நண்பர்கள் எல்லாம் ஓடிவந்தனர். மறுநாள் இரவு எப்போது வரும்—எப்போது பரிமளாவை சந்திக்கலாம்—என்ற ஆவலோடு மணித்துளிகளை விரட்டிக் கொண்டிருந்தான் துரை. மாயாண்டிக்கு மாத்திரம் அம்பலத்தின் பேச்சிலே அவ்வளவாக நம்பிக்கையில்லை. தங்களை விடுவிக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதும் அவர்களுக்குப் புரியவில்லை. எதற்கும்—அம்பலம் குறிப்பிட்ட மனோராவுக்கு, துரை பத்து நண்பர்களுடன் போவதென்று தீர்மானிக்கப்பட்டது. அம்பலத்தினால் ஏதாவது ஆபத்து நேருமானால் அதிலிருந்து தப்புவதற்காகவே அந்த ஏற்பாடு. மாயாண்டிக் கிழவர் மருங்கப்பள்ளம் சென்று, அங்கே பரிமளா இருக்கிறாளா?—என்ற விபரத்தை அறிந்து வர வேண்டுமென்றும், அதற்கு அவரே தகுதியானவர் என்றும் தீர்மானம் நிறைவேறியது.

எதிர்பார்த்திருந்த நேரமும் வந்துவிட்டது. மாயாண்டி, மருங்கப்பள்ளம் நோக்கிப் பயணமானார். துரையும் அவனது நண்பர்களும் மனோராவுக்குப் புறப்பட்டார்கள். மருங்கப்பள்ளம் போன்ற கிராமங்கள் மாயாண்டிக் கிழவருக்கு மிகவும் பழக்கமான இடங்கள். கிராமத்தார் அனைவருமே அவரிடத்திலே அனுதாபத்தோடு பேசிக் கொண்டிருப்பார்கள். அத்தகைய அனுதாபம்தான் போகிற வேலைக்குப் பயன்படும்

என்று நம்பித்தான் மாயாண்டி அந்த ஊருக்குக் கிளம்பினார். முதலில், அவர் தாண்டவன் வீட்டுக்குள் நுழைந்தார். அங்கே தாண்டவனின் மனைவி சோக முகத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தாள். தாண்டவனும் ஆத்திரமும் வருத்தமும் ஒன்றையொன்று முந்திட வீட்டுத் திண்ணையிலே அமர்ந்திருந்தார். மாயாண்டிக் கிழவர், "என்ன தாண்டவம்–சுகந்தானா?" என்று கேட்டபடி அங்கேயே உட்கார்ந்தார். சிறைக்குப் போன மாயாண்டி, இவ்வளவு சீக்கிரம் எப்படித் திரும்ப முடிந்தது என்ற வியப்போடு, தாண்டவன், "ஜெயிலிலேயிருந்து எப்பய்யா வந்தீர்?" என்று கேட்டார். "போனதும் வந்து விட்டேன். அதிருக்கட்டும்; உமது மகள் அகப்பட்டு விட்டாளா?" என்ற கேள்வியைப் போட்டார் மாயாண்டி. அதற்குத் தாண்டவன் பதில் சொல்வதற்குப் பதிலாக, பரிமளாவின் தாயாரே ஒப்பாரி மூலம் நிலைமையை விளக்கிவிட்டாள், அவள் வந்து சேரவில்லையென்று! சிறிது நேரம் அங்கே பேசிக் கொண்டிருந்துவிட்டு, பரிமளாவைப் பற்றி எந்த விதமான புலனும் கிடைக்காத காரணத்தால் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினார் மாயாண்டி.

இரவும் வந்துவிட்டது. மாயாண்டி, மெதுவாக வெள்ளியம்பலத்தின் வீட்டு வழியே சென்றார். அம்பலம் வீட்டில் இல்லையென்று தெரிந்துகொண்டார். அவரது வாய்க்கால் ஓரப் பங்களாவில் இருப்பாரோ என்று சிலரை விசாரித்தார். "அங்கும் இருக்க நியாயமில்லை. ஏனெனில் அந்த பங்களா இரண்டு நாளாய்ப் பூட்டிக் கிடக்கிறது" என்று ஒருவர் பதில் சொன்னார். இன்னொருவர், "அந்த வீட்டிலே ஒரு கொலைகாரன் அடைபட்டிருந்ததாகவும், அவனை நேற்றுப் போலீசார் கைது செய்தார்கள்" என்றும் தகவல் கொடுத்தார். மாயாண்டிக்கு அந்த பங்களாவைப் பற்றி சந்தேகம் ஏற்பட்டது. அதை நோக்கி நடந்தார். வேலைக்கார ராமன் பங்களாவின் வாசலிலே உட்கார்ந்திருந்தான். அவன் மாயாண்டி வருவதைப் பார்த்து, "வாங்க தாத்தா" என்று எழுந்தோடி வரவேற்றான். "வெள்ளியம்பலம் எங்கேப்பா?" என்று கேட்டுக்கொண்டே அந்த வீட்டின் ஒட்டுத் திண்ணையிலே உட்கார்ந்து கொண்டார் மாயாண்டி.

"அவரு... அவரு... எங்கேயோ போனாருங்க!" என்று மழுப்பினான் அவன்.

"கதவு பூட்டியிருக்கிறது; உள்ளே விளக்கு எரிகிறதேயப்பா!" என்று மாயாண்டி ராமனிடம் கேட்டார்.

"லட்சுமிகளையிருக்கணும்னு விளக்கு எரியுதுங்க" என்று சமாளித்தான் ராமன். மாயாண்டி, ராமனை அன்போடு அழைத்து, "ராமா! கொஞ்சம் பொடி வேணும்! வாங்கிட்டு வர்ரியா?" என்று அவனை அனுப்ப வழி பார்த்தார்.

"பொடி எனகிட்டே இருக்கு தாத்தா: இந்தாங்க!" என்று டப்பாவை அவரிடம் கொடுத்தான். பொடி போடும் பழக்கமில்லாத அவர், பொடியைப் போட்டுக் கொண்டு தும்மத் துவங்கினார். ராமனை எப்படியாவது வெளியே அனுப்பிவிட்டால் உள்ளேயிருப்பவர்களைப்பற்றி ஏதாவது உளவு கண்டு பிடிக்கலாம் என்று மாயாண்டி துடித்தார். "ராமா, சுருட்டு இருக்கா உனகிட்டே?" என்றார். "இதோ!" என்று எடுத்து நீட்டினான். அதையும் புகைக்க வேண்டிய சிரமம் ஏற்பட்டது. மாயாண்டியும், ராமனும் பேசிக் கொண்டிருப்பதை உள்ளேயிருந்து பரிமளாவினால் நன்றாகக் கேட்க முடிந்தது. மாயாண்டிக் கிழவரின் குரல்தானோ என்ற சந்தேகத்தோடு, அவள் சுவரின் இடுக்கு வழியே வெளியே பார்த்தாள். அவரேதான் என்று மகிழ்ந்தாள். தான் உள்ளேயிருப்பதை எப்படித் தெரியப் படுத்துவது என்று தெரியாமல் தவித்தாள். வேண்டுமென்றே, தனக்கு ஏதோ தேவையிருப்பது போல, உள்ளிருந்து, "ராமா! ராமா! அது யாரு ராமா?" என்று உரக்கக் கேட்டாள். மாயாண்டிக்கு விஷயம் புரிந்துவிட்டது. ராமன் நடுங்கிவிட்டான். "என்னப்பா பெண் குரல்?" என்று மாயாண்டி கேட்டார்.

"எனக்கு அப்பவே தெரியும்; இந்த வீட்ல மோகினிப் பிசாசு இருக்குதுன்னு சொல்லிகிட்டே இருக்கேன்! அய்யா கேக்கிறாரா?" என்று நடுங்குவதுபோல நடித்தான் ராமன்.

மாயாண்டியும், பிசாசுக்குப் பயப்படுவது போல, "அப்பாடி! பிசாசுன்னா நமக்கு ஆகாதப்பா!—நான் வர்ரேன்!" என்று வேகமாக நடக்க ஆரம்பித்தார்.

ராமன் வீட்டுக்குள்ளே திரும்பி, "இந்தாம்மா! சத்தம் போடாம இரு!" என்று கூறிவிட்டுத் தன் படுக்கையைத் திண்ணையிலே விரித்துக் கொண்டான். மணி ஓடிக் கொண்டேயிருந்தது.

நடுநிசி. பரிமளாவுக்குத் தூக்கம் வரவில்லை. எப்படித் தூக்கம் வரும்? கண்ணுக்குத் தெரிந்த உதவியும் கைவிட்டுப் போய் விட்டதேயென்று கவலையில் ஆழ்ந்தாள் அவள். நேரம் ஆக ஆக அவளுக்கு பயம் அதிகமாயிற்று. எப்படியாவது அந்த வீட்டை விட்டுத் தப்பிவிட வேண்டுமென்று முடிவு செய்துவிட்டாள். அம்பலம் சொன்னபடி துரை வருவது சந்தேகந்தான் என்று நினைத்துவிட்டாள். தான் எப்படியும் வெளியேற வேண்டும். தன்னைத் தடுப்பதற்கு துக்காராமும் கிடையாது. ராமன் மட்டுமே இருக்கிறான். அதுவும் வெளியிலே தூங்குகிறான். ஆகையால் தப்பித்துச் செல்ல இதுதான் தக்க சமயம் என்று புறப்பட்டாள். கூரையைப் பிரித்துக் கொண்டு வெளியே குதிக்க முடியுமா?–முடியாது. அதற்கான வசதிகள் இல்லை. நீண்ட யோசனைக்குப் பிறகு, மூலையிலே கிடந்த ஒரு கடப்பாரையை எடுத்தாள். கொஞ்சங் கொஞ்சமாக, மண் சுவற்றைப் பெயர்க்கஆரம்பித்தாள். 'விடுதலை: விடுதலை!' என்ற ஆர்வத்தோடு அவள் அந்தக் காரியத்திலே நடுக்கமின்றி ஈடுபட்டாள். எப்படியும் அங்கிருந்து ஓடித் தன் அத்தானைக்காணவேண்டுமென்று முயன்றாள் பரிமளா. அவள் அத்தானோ அவளைக் காண்பதற்காக நண்பர்களோடு, மனோராவுக்கு வந்து சேர்ந்தான்.

நண்பர் கூட்டத்தின்மீது டார்ச் லைட்டின் ஒளி பட்டது. துரையுள்பட அனைவரும் திடுக்கிட்டனர். "வா துரை! வந்துட்டியா? ஏம்பா இவ்வளவு துணையோடு வர்ரே?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார், எதிரே நின்ற அம்பலம்.

"இருட்டுக் காலமல்லவா?... திருடர் பயம் அதிகமாயிருக்கிறதே!" என்றான் துரை.

"மடியிலே கனமிருந்தால் தானே வழியிலே பயம்! சரி... வா வா!..." என்று அவனை அழைத்துக்கொண்டு மனோராவின் அடித்தளத்துப் பக்கம் சென்றார். நண்பர்களும் அவன்கூடச் சென்றார்கள்.

"பரிமளா எங்கே?" என்று ஆவலாகக் கேட்டான் துரை.

"உப்பரிகையிலே இருக்கிறாள். உன் வரவுக்காக காத்திருக்கிறாள்" என்று கூறினார் அவர்.

அனைவரும் மனோராவுக்குள் நுழைந்தனர். அந்த மனோராவின் ஒவ்வொரு உப்பரிகைக்கும் படிகள் உண்டல்லவா?...அந்தப் படிகள் வழியே ஏறி முதல் உப்பரிகையை அடைந்தனர். முதல் உப்பரிகையிலிருந்து அதற்குமேல் உப்பரிகைக்கு ஏற, துரை முதலில் முயன்றான். ஆனால் அவனது நண்பர்கள், "நீ கடைசியில் ஏறலாம்" என்று கூறிவிட்டு அவர்கள் முதலில் படிகளைக் கடந்து, இரண்டாம் உப்பரிகையை அடைந்தனர். துரையும், இன்னொரு நண்பனும், அம்பலமும் முதல் உப்பரிகையில் இருந்தனர். துரையும், படியேற முயற்சித்தான். அவ்வளவுதான்; அம்பலம், தன் கையிலேயுள்ள டார்ச் லைட்டால் தலையில் ஓங்கி அடித்தார். அவன், 'அய்யோ' என்று சப்தம் போடுவதற்குள், ஐம்பதுக்கு மேற்பட்ட முரடர்கள் முதல் உப்பரிகைக்குள் நுழைந்துவிட்டனர். இரண்டாம் உப்பரிகையில் இருக்கும் நண்பர்கள் யாரும் கீழே இறங்க முடியாமல் தடுக்கப்பட்டனர். கீழேயிருந்த துரையின் ஒரே ஒரு நண்பனும் பலத்த காயத்திற்கு ஆளாகி மரணாவஸ்தையோடு கீழே விழுந்தான். துரை முரடர்களால் கட்டித் தூக்கப்பட்டு, வெளியே கொண்டு வரப்பட்டான். உப்பரிகையில் சிக்கிக் கொண்ட நண்பர்கள், மேலேயிருந்து கீழே குதித்து துரையைக் காக்க முயன்றனர். முடியவில்லை. விடுபட முடியாதபடி அவர்கள் உப்பரிகையிலே சிக்கி விட்டதாலும், அவர்களைக் கீழே இறங்க விடாமல் முரடர்கள் தடுத்து நின்றதாலும், துரை வெள்ளியம்பலத்தின் கையிலே சிக்கிவிட்டான்.

அங்கே, தன்னை விடுவித்துக் கொள்ள பரிமளா முயலுகிறாள். இங்கே துரையும் சிக்கிக் கொண்டான். இந்தச் செய்தியை அவளுக்குச் சொல்ல யார் இருக்கிறார்கள்? அவளோ, மிகவும் கஷ்டப்பட்டு, சுவற்றை இடித்துக் கொண்டிருந்தாள். சப்தமும் கேட்கக் கூடாது: சுவற்றிலும் துளை ஏற்பட வேண்டும். இந்தக் கடினமான காரியத்தை அவள் மன தைரியத்தோடு செய்து இறுதியில் வெற்றியும் பெற்றாள்.

சுவற்றிலே அவள் நுழையும் அளவுக்கு துவாரம் ஏற்பட்டு விட்டது. நுழையவும் முயற்சித்தாள். தெருவிலேயிருந்து ராமனின் குரல் கேட்டது.

"யார்ரா இது? கன்னம் வைக்கிறது?" என்று அதட்டினான். ஓடிப்போய், தெரு வாசல் இருக்கும் வழியாக கவனித்தாள். நாய் ஒன்று அவன் கன்னத்திலே தன் முகத்தை வைத்து படுத்திருக்கிறது. ராமன் மீண்டும் கத்தினான்.

"யார்ரா இது — கன்னத்தில கன்னம் வைக்கிறது?" என்று கேட்டுவிட்டு, நாயைத் தள்ளிவிட்டு, புரண்டு படுத்துக் கொண்டான்.

பரிமளா மீண்டும் தைரியம் பெற்றாள். சுவற்றிலே தான் உண்டாக்கிய துவாரத்தின் வழியாக படுத்தபடியே வெளியே எட்டிப் பார்த்தாள். யாருமில்லை. நகர்ந்து நகர்ந்து வெளியே வந்து விட்டாள். "அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டாள். யாரோ, அவளது தோளைப் பிடித்துக் கொண்டார்கள். "அகப்பட்டுக் கொண்டோம்!" என்ற ஏக்கத்தோடு, பரிமளா அப்படியே குப்புற விழுந்தாள்.

"பரிமளா!" என்று ஈன சுரத்திலே அழைப்பு வந்தது.

"யார்? மாயாண்டிக் கிழவரா?"

ஆம்! அவரேதான்—என்று பரிமளா மகிழ்ந்தாள்.

"புறப்படு! புறப்படு!!" என்று அவரும் அவசரப் படுத்தினார். இருவரும் எதுவும் பேசாமல் நடந்து கொண்டேயிருந்தார்கள். மருங்கப்பள்ளம் கிராமத்தைத் தாண்டி வெகுதூரம் நடந்து விட்டார்கள்.

எதிரே ஒரு பெரிய வண்டி வந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் இருவரும் பதுங்கிக் கொண்டார்கள். வண்டி அவர்களைக் கடந்து சென்றது. அந்த வண்டியிலேதான், கை கால் கட்டப்பட்ட துரையும், அம்பலமும் இருக்கிறார்கள் என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

[ வளரும் ]


அடுத்த ஒலியில்

# சக்கரவர்த்தியின் திருமகன் குறளோவியம் மகாபாரதம்

## பொன்முடியின் கடிதம்....

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

தசாம்சப் பெயர்களை வழங்கினால் உலகச் சமாதானம் நிலை குலைந்துவிடுமா? பாரதத்தின் பெருமை சீர்கெட்டு விடுமா? என்ன நேர்ந்துவிடும்?... அரசாங்கம் இந்தி தசாம்சப் பெயர்களையே நாணயங்களுக்கு எப்படியும் வழங்க வேண்டுமென்று நினைக்குமானால், இந்தியை எதிர்க்காத நான் கூட (அரசினரின் இந்த முயற்சிகளை) முட்டாள்தனமானதென்றும், ஆத்திரமூட்டக் கூடியதென்றும் கண்டிக்க வேண்டியவனாவேன்; ஈ. வே. ரா.வின் கட்சியில் கூட சேர்ந்துகொள்ளலாமென நினைப்பேன். இந்தி தசாம்சங்களை உபயோகிக்காவிட்டால் வானம்இடிந்து விடாது; நம்நாட்டுப் பொருளாதார நிலைமையொன்றும் சீர்கெட்டு விடாது.”

-இதே கருத்துகளை ஆகஸ்ட் 5-ம் தேதியன்று இன்னொரு வாசகர் ‘இந்து’வுக்கு எழுதிய கடிதத்தின் மூலம் வற்புறுத்தியிருக்கிறார்.

டி. எஸ். சந்திரசேகரன் என்று பெயர் கொண்ட அவர், ஒரு ரூபாயின் நூறு பிரிவுகளை ‘செண்ட்’ என்றே குறிப்பிட வேண்டுமென்றும், ‘பைசா’ என்னும் இந்திப் பெயரை அதற்குச் சூட்டினால் பொது மக்களிடையே குழப்பம்தான் உண்டாகுமென்றும் அவர் எழுதியுள்ளார்.

அன்புள்ள குமார்! அங்கிங்கெனாதபடி எங்கும் இந்திக்கு எதிர்ப்பு கிளம்புகிறது. அக்கிரகாரத்திலிருந்தும் கண்டனக் கணைகள் கிளம்புகின்றன.

நடராஜர் பக்தர் நாராயணசாமிப் பிள்ளை எதிர்க்கிறார். லெட்சுமணசாமி முதலியார் எதிர்க்கிறார். ‘இந்து’வின் மூலம் யார் யாரோ எதிர்க்கிறார்கள். நாமும் எதிர்க்கிறோம். எதிர்ப்பவர்களில் சிலர் இந்தி பொது மொழியாயிருப்பதை ‘ஆதரிக்கிறார்கள்-என்பது மட்டும் உண்மை.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம், தான் நடத்தும் இந்தி எதிர்ப்புப் போரிலே அவர்களுடைய **‘எதிர்ப்பு உணர்ச்சி’**யையும் தனக்கு ‘ஆதரவு உணர்ச்சி’யாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறது.

நம்முடைய போராட்டத்தை ‘அவர்கள்’ ஆதரிக்காவிட்டாலும், ‘இதிலும் நியாயமிருக்கிறது’—என்று அவர்கள் சொல்லுகிற நிலையாவது பிறக்க வேண்டுமென்றுதான் நினைக்கிறோம்.

அன்புள்ள,
பொன்முடி


**‘முரசொலி’**

**இலங்கைத் தோழர்களுக்கு:**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 6–0–0 |
| 6–மாத சந்தா | 3–8–0 |

இலங்கை நேயர்களிடமிருந்து வி. பி. பி. மூலம் சந்தா தொகை பெற்றுக் கொள்ள இயலும்.

**வெளிநாடு**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 7-0-0 |
| ஆறுமாத சந்தா | 4–0–0 |

மலேயா நேயர்கள், சந்தா தொகைக்கு ‘கிராஸ்’ செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டுகிறோம்.

மூன்று மாத சந்தா கிடையாது.


# கலப்படம்

Anand

“தனிமையாக இருக்க முடியாததினாலேயே சகல துன்பங்களும் உண்டாகின்றன”

—ஸாபுரூயா.

தனிமையாக இருக்க முடியாததினால்தான் பெரியாரின் அறிக்கைக்குப் பிறகும் நான் சிந்தாதிரிப்பேட்டையில் இருக்கிறேன்.

—குத்தூசியார்.

★

“பார்க்க மாட்டோம்’ என்று சாதிக்கும் அளவுக்கு குருடாயுள்ளவர் உலகில் கிடையாது”

—ஸ்விப்ட்.

‘தி. மு. க. என சொல்ல மாட்டோம்’ என்று சாதிக்கும் ஊமைகள் உலகில் அதிகம்.

—நாம்.

★

“தலைவர்களாயிருப்போருக்கு எப்போதும் போராட்டம்தான். முன்னே செல்லுவோரை இழுத்துப் பிடிக்க வேண்டும்; பின்னே வருவோரை இழுத்துக் கொண்டு போக வேண்டும்.”

—ஸ்டாலின்.

எனக்கு இப்படி ஒரு அவசியமே ஏற்படுவதில்லை. ஏனெனில் முன்னே செல்வதும் பின்னே வருவதும் என் நிழல்தான்.

—ம. பொ. சி.

★

“வாயில் இனிப்பவை வயிற்றில் புளிக்கும்!”

—ஷேக்ஸ்பியர்.

இப்போது இனிக்கும் காமராசரின் அறிக்கைகளும் அப்படித்தானோ?

—சென்னை பிரஜை.

★

“சண்டை தனக்குள் ஆரம்பிக்கும் பொழுதுதான் மனிதன் ஏதோ சிறிதேனும் மதிப்புடையவனாகிறான்”

—பிரௌனிங்.

சண்டை எங்களுக்குள் உதயமாகும்போதுதான் எங்கள் பெயர் வெளியில் தெரிய ஆரம்பித்திருக்கிறது.

—பிரஜா சோஷலிஸ்ட்.

★

“உன்னைவிடப் பிறனை நேசி”

—காந்தி.

அதுவும் பார்ப்பனராகப் பார்த்து இரகசியமாக நேசி.

—தீண்டாமைச் சுவரொட்டிகளை உடனே வாபஸ் வாங்கிக் கொண்ட காமராசர்.

★

“காதல் கடிதம் எழுதுகிற பேர்வழி இளைத்துப் போவதும், அக்கடிதங்களைப் பெறுகிற பேர்வழி கனத்துப் போவதும் இயல்பு.

—யாரோ.

அப்படியானால் நேரு இளைக்கவில்லை; நாங்களும் கனக்கவில்லையே?

—நேருவிடமிருந்து கடிதம் வந்ததாகக் கூறும் தமிழரசு.

★

## வெள்ளி இரவு....

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

புரளுவதையும் அறிவேன். உன் துன்பக் காவியத்திற்கு முடிவுரை எழுதி, இன்பக் காவியம் தீட்ட நான் தயார். கண்ணே! கற்கண்டே! கனிச்சாறே! என் இன்னலைத் தீர்க்கும் மாமருந்தே!” என்று செந்தமிழில் தேனைக் கலந்து, என் சிந்தை குளிர பேசிக்கொண்டேயிருந்தார். நான் மெய்மறந்து நின்றேன். என் கையை தொட்டார். என் உடலெல்லாம் இன்பம் மின்னல் போல் பாய்ந்தது. அவரின் அரவணைப்பிலே நான் உலகை மறந்தேன். நான் பிறந்த பயனை அடைந்தேன். பாலைக் குடித்துவிட்டு ஓடும் பூனை போல, அவர் போய்விட்டார். நாட்கள் தேயத் தேய என் வயிற்றில் அவர் அளித்த அமுதம் வளர ஆரம்பித்தது. ஆனால் திருடி உண்ட அமுதம் விஷமாக வளர்ந்தது. அவர் என்னை நாடி வருவதும் நின்றது. பின் ஒருநாள் அவர் போய்விட்டார். எங்கிருந்தோ வந்து என் வாழ்வில் புயலை உண்டாக்கிவிட்டு எங்கேயோ போய்விட்டான் அந்தப் பாவி! என் தந்தை அறிவதற்கு முன்னே, உலகம் கண்டு எள்ளி நகையாடுவதற்கு முன்னே, என் உடலை அழித்துக்கொள்ள-உயிரை மாய்த்துக்கொள்ள காவேரியிடம் ஓடி வந்தேன். நீங்கள் தடுத்துவிட்டீர்கள். நீங்களே சொல்லுங்கள், நான் வாழப் பிறந்தவள்தான்; ஆனால் வாழக் கூடாதவள். சாகப் பிறந்தவள்!”-அணை உடைபட்ட வெள்ளம்போல, அவள் கண்ணீர் சொரிந்தாள். என் கண்களும் குளமாயின.

“வேணி! பெற்றோரின் அறியாமையால் வாழ்விழந்த நீ, வஞ்சகன் ஒருவனால் வஞ்சிக்கப் பட்டாய். அது உன் குற்றமல்ல! செல்லரித்துப்போன சமுதாயத்தின் குற்றம். இளம் பெண்ணை—உணர்ச்சியின் பெட்டகத்தை—‘விதவை’ என்ற வேலி போட்டு தடுத்த உன் தந்தையின் குற்றம், ஆசையையும், பாசத்தையும் அள்ளித் தெளித்து, பெண்களைப் படுக்கையறைப் பதுமைகளென நினைக்கும் நீசக் குணம் படைத்த மனித சமுதாயத்தின் குற்றம். மரணதேவதையை தழுவத் துடிக்கிறாய் நீ. என் நிலையும் அதுவேதான். இந்தப் பரந்த உலகில் நான் தனி மனிதன். ஏமாற்றத்தின் பிரதிநிதிகள் நாம். வஞ்சிக்கப்பட்டவர்கள் நாம். எஞ்சிய நாட்களை நாம் இருவரும் உலகத்தின் எங்கேயாவது ஒரு மூலையில் கழிப்போம். உன் வயிற்றில் வளருகிற குழந்தை இனி நம் குழந்தை. வாழக்கூடாது என்று உலகம் கட்டளையிடுகிறது, நம்மை நோக்கி! ஆனால் நாம் வாழ்ந்து காட்டுவோம் உலகிற்கு. சரியென்று சொல் என்செல்வமே!”

“நான் ருசி கண்ட பூனை மட்டுமல்ல; சூடு கண்ட பூனையுங்கூட”

“அறிவேன். ஆனால் நான் இழிகுணம் படைத்தவனல்ல. இதோ வானத்திலே வலம் வருகிறதே, அந்த வெண்ணிலவு சாட்சி! சிந்து பாடும் ‘சாகாத’ காவேரி சாட்சி! வீசும் தென்றல் சாட்சி! உன்னை நான் கைவிடேன், என் உயிர் உள்ளவரை”

அவள் கண்ணீரால் சம்மதம் தெரிவித்தாள். நாங்களும் கைகோர்த்து எங்கள் வாழ்க்கைப் பயணத்தைத் துவக்கினோம். “வெள்ளி இரவு” இருண்ட குகையிலிருந்து மீண்ட எங்களுக்கு வழி காட்டியது.

★

## 'கற்பனைக் கமிட்டி'யின் ரிப்போர்ட்!

# மூன்றும் வகுப்புப் பிரயாணி!

இருபதாம் நூற்றுண்டை 'அணுயுகம்' என்கிருர்கள். இந்தியாவைப் பொறுத்தவரையில் அது தவறு; இது 'மூன்ரும் வகுப்புப் பிரயாணிகள் யுகம்'!

இந்திய சர்க்காருக்கு கடன் கொடுக்கும் மாபெரும் 'வட்டி வேந்தன்' மூன்ரும் வகுப்புப் பிரயாணி! காங்கிரசின் அரசாங்கத்தை டாட்டா, பிர்லா போன்ற முதலாளிகளின் தலையாட்டி பொம்மை — என்று அழைப்பதற்குப் பதிலாக, 'மூன்ரும் வகுப்புப் பிரயாணிகளின் கைப்பாவை' — என்றுகூட கூறிவிடலாம்.

மூன்ரும் வகுப்புப் பிரயாணிதான் இந்திய அரசின் அச்சாணி! ஐந்தாண்டுத் திட்டங்களின் ஆதிமூலம்! நிதி இலாக்காவின் ஆணிவேர்! அவனில்லையேல் டெல்லியிலே ஒரு அணுவும் அசையாது! ஆண்டாண்டு தோறும் கோடிக் கணக்கில் அவன் குவிக்கும் இலாபத் தொகைதான் கோலோச்சுபவர்களை 'குஷி'ப்படுத்திக் கொண்டிருக்கிறது.

தேசியக் கொடியிலே அசோகச் சக்கரத்திற்குப் பதில், இனி ஒரு மூன்ரும் வகுப்புப் பிரயாணியின் சித்திரத்தை வரைந்தால்கூட அது பொறுத்தமாகத்தான் இருக்கும்!

தேசிய கீதத்திலேகூட ஒரு திருத்தம் கொண்டு வரலாம். 'பஞ்சாப சிந்து குஜராட்ட மராட்ட'வோடுகூட 'மூன்ரும் வகுப்பு பிரஜா' என்று ஒரு வரி இணைத்தால் தாகூரின் ஆவிகூட ஆனந்தக் கூத்தாடும்.

ஆனல் குப்பையிலே எறிந்த மாணிக்கம்போல மூன்ரும் வகுப்புப் பிரயாணி கவனிப்பாரற்று கிடக்கிருன்.

வடநாட்டு ஏகாதிபத்யம் இரு மாபெரும் சக்திகளை வேண்டுமென்றே புறக்கணித்து வருகிறது. ஒன்று தென்னடு. இரண்டாவது மூன்ரும் வகுப்பு!

அவன் இல்லாவிட்டால் ரயில் ஓடாது! இந்திய அரசாங்கம் இன்னும் அதிகமாக அமெரிக்காவிடமிருந்து பணம் இரவல் வாங்க வேண்டும். ஆனல் அவனே இரங்கத்தக்க நிலையிலிருக்கிருன்!

மூன்ரும் வகுப்புகளை எப்படியெல்லாம் சீர் திருத்தம் செய்யவேண்டுமென்று கோரி, நாம் ஒரு 'கற்பனைக் கமிட்டி'யொன்றை நியமித்தோம். அது கீழ்க்கண்ட சிபார்சுகளை சமர்ப்பித்திருக்கிறது.

★★ ஜன்னல் கதவுகளெல்லாம் வாயிற்படிகளாக உபயோகப் படுவதால், இனிமேல் ஜன்னல் இருக்குமிடமெல்லாம் வாயிற்படிகளை அமைக்க வேண்டும்.

★★ பெட்டிகளுக்கு உள்ளே நுழையும் வழியில் பிரயாணிகள் உட்கார்ந்து கொள்வதால், இனிமேல் அங்கும் ஆசனங்கள் அமைக்க வேண்டும்.

★★ 'புட் போர்டி'லே ஏராளமான தோழர்கள் பிரயாணம் செய்வதை, அவ்வப்போது மாறுவேஷத்தில் பிரயாணம் செய்யும் மந்திரிமார்களைத் தவிற, கண்ணுள்ளவர் அனைவரும் - அந்தக் கோரக் காட்சியைக் கண்டிருக்கலாம். எனவே இனிமேல் 'புட் போர்'டில் பிரயாணம் செய்பவர்களுக்கென குறைந்த கட்டணத்தில் 'நான்காவது வகுப்பு' ஒன்றை துவங்க வேண்டுமென்று இந்தக் கமிட்டி வேண்டிக் கொள்கிறது.

★★ மூன்ருவது வகுப்புப் பெட்டிகளில் ஆசனங்களைத் தவிர்த்து, மீதமிருக்கும் 'தரை' யெனப்படும் பகுதி, இப்போது குப்பை கூளங்களையும், பழத் தோல்களையும் போடுவதற்குப் பயன்படுத்தப்படுவதால், இனிமேல் ரெயில்வே ஆதிகாரிகள் மேற்கூறிய 'தரையை' குப்பைத் தொட்டி மாடலில் திருத்தி அமைக்க வேண்டும். மேலும் ஆங்காங்கே துவாரங்களை அமைத்து தேங்கியிருக்கும் அழுக்கு நீரெல்லாம் கீழே வடிவதற்கும் வசதி அமைத்துக் கொடுக்க வேண்டும்.

★★ 'நான்காவது வகுப்பு'— என்று ஒரு புதியபகுதியை மேலே குறிப்பிட்டது நினைவிருக்கலாம், 'ஐந்தாவது வகுப்பு' ஒன்றையும், இன்னும் குறைந்த கட்டணத்தில் துவங்கவேண்டுமென்று இந்தக்கமிட்டி சிபார்சு செய்கிறது.

'ஐந்தாவது வகுப்'பிற்கான விபரங்கள் :

'லெட்ரின்' என்று வழங்கப்படும் கக்கூஸ்களில் மூன்ரும் வகுப்புப் பெட்டிகளில் இருப்பதைவிட அதிகமான சௌகர்யங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக, அங்கே கண்ணாடி ஜன்னல்களும், தண்ணீர் வசதியும் இருப்பது அபாய காலத்தில் அதை உபயோகிப்பவர்களுக்குத் தெரிந்திருக்கும். (பொதுவாக மூக்கைத்தான் மூடிக்கொள்வார்களாதலால் திறந்திருக்கும் கண்களால் அதைப் பார்த்திருக்கலாம்— என்று கமிட்டியின் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் நம்புகிருர்கள்.) எனவே வசதி நிறைந்த அந்தப் பகுதியில் பிரயாணிகள் விரும்பினல், தாங்களாகவே ஒரு சாய்வு நாற்காலியை கையோடு எடுத்து வந்து அங்குபோட்டு உட்கார அனுமதி வழங்கப்படலாம். இந்த ஏற்பாட்டைத்தான் கமிட்டி **ஐந்தாவது வகுப்பு** என்று குறிப்பிடுகிறது.

ஐந்தாண்டுத் திட்டத்தை அமுல் செய்வதைப்போல கால தாமதம் செய்யாமல், மேற்கூறிய 'ஐந்தாவது வகுப்பை' உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்.

இதிலே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய கொள்கையொன்றும் இருக்கிறது. 'கக்கூஸ் அல்லவா அது? அதில் எப்படி உட்காருவது?' என்று சிலர் எதிர்ப்புக் குரலும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தலாம். எனவே இதுபோன்ற அரசாங்கத்துக்கு விரோதமான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு, "இந்தி மொழி எப்படி மற்ற பிராந்தியங்கள்மீது அவர்கள் இஷ்டத்துக்கு மாருகத் திணிக்கப்படாததைப் போல, 'ஐந்தாவது வகுப்பை'யும் 'மக்கள் உபயோகித்துத்தான் தீரவேண்டு'மென்று சர்க்கார் கட்டாயப் படுத்தாது" — என்று திட்டவட்டமாக அறிக்கையொன்று உடனே வெளியிடவேண்டும்.

இன்னும் பதினைந்து ஆண்டுகளில் இந்தி கட்டாயப் பாடமாகிவிடுமென்று இந்திய அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டிருப்பதைப் போல, நாமும், கால வரம்பு காட்டாமல், விரைவில் 'ஐந்தாவது வகுப்பு அமுலாகும்' என்று இந்திய அரசியல் சட்டத்தில் சேர்த்துவிட வேண்டும். நேரு வெளிநாடு போகாமலிருக்கும் இந்த நேரத்திலேயே இதைச் செய்தால் மிகவும் பயன் வாய்ந்ததாய் இருக்குமென்று இந்தக் கமிட்டி நம்பிக்கை தெரிவிக்கிறது.

மேலும் நமது பிரதமர் நேரு அவர்கள் ரஷ்யாவுக்கு விஜயம் செய்திருந்தபோது, புல்கானின் அவருக்கு மாஸ்கோவிலுள்ள 'பாதாள ரயில் பாதையை'க் காண்பித்து பெருமைப்பட்டாராம். எனவே புல்கானின் இந்தியாவுக்கு வருவதற்குள் நம்முடைய மேற்கண்ட சிபார்சை செய்து முடித்துவிட்டால், ரஷ்யப் பிரதமருக்கு நாமும் நமது 'ஐந்தாவது வகுப்பை'க் காண்பித்து, பிரயாணிகளுக்கு நாங்கள் எவ்வளவு வசதி செய்து தருகிறேம் பார்த்தீர்களா?" — என்று பெருமையோடு பேசி மகிழலாம்!

★★ இப்படிப்பட்ட சீரும், சிறப்பு மிக்க திட்டத்தை சிபார்சு செய்த இந்தக் கமிட்டிக்கு, ஜனதிபதி ராஜேந்திர பிரசாத் 'பாரத ரத்ன' பட்டம் வழங்குவாரேயானல், இப்படிப்பட்ட கமிட்டிக்கு காரணஸ்தராக இருந்த கனம் லால்பகதூர் சாஸ்திரி அவர்களுக்கு அந்தப் பட்டத்தைத் திருப்பி அளித்து கௌரவிப்பது — என்றும் நாங்கள் ஏகமனதாய் (கைதட்டலுக்கிடையில்) முடிவு கட்டுகிறேம்.

★★ அடுத்தபடியாக; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே விவசாய வளர்ச்சிக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாமறிவோம். உணவைப் பெருக்க வேண்டுமென்னும் ஒரே காரணத்துக்காகவே நாம் சிந்திரியில் ஒரு உர உற்பத்தி சாலையும் நிர்மாணித்திருக்கிறேம்.

இப்போது சிந்திரியில் தயாராகும் உரமும் போதுமா?—என்னும் கேள்வி பிறந்திருக்கிறது. எனவே மூன்ரும் வகுப்புப் பெட்டிகளிலே நிமிஷத்துக்கு

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

## உங்கள்

பீகார்
1—8—55

அன்புடையீர், வணக்கம்.

29—7—55 'முரசொலி'யில் 'கொடி எரிப்புக் கிளர்ச்சி' தலையங்கத்தில் மாற்றுக்கட்சியினரைப் புண்படுத்தாத வகையில் நல்ல விளக்கம் தந்திருக்கிறீர்கள். தந்தைப் பெரியாரின் பொன்மேனி அடக்குமுறைக்கு ஆளானால் நாங்கள் அயர்ந்திருக்க மாட்டோம்-என்பதை படிக்கும் போதெல்லாம் நாமும் தமிழ் நாட்டில் இல்லையே என்ற உணர்வு ஏற்படுகிறது. என்ன செய்வது? நம் தமிழ் நாட்டில், வளம் இருந்தும் வாழ வழி இல்லை; அதனால் வடநாட்டுக்கு வந்து பிழைக்கவேண்டிய நிலை இருக்கிறது. தங்கள் பத்திரிகையிலும் அடிக்கடி எழுதி வருகிறீர்கள். நாங்கள் இருக்கும் பீகாரில், சிந்திரியில் எரு உற்பத்திசாலை ஒன்றே போதும். இவ்விடம் எங்கு பார்த்தாலும் தொழிற்சாலைகள் பெருகிக்கொண்டே வருகிறது. தங்கள் 'முரசொலி' பத்திரிகையில் வரும் செய்திகளெல்லாம் பொது மொழி ஆங்கிலத்தில் இல்லையே என்று குறை பட்டோம். அந்தக் குறையை இப்பொழுது தீர்த்துவிட்டீர்கள். ஆமாம்; 'முரசொலி'யை ஆங்கிலத்திலும் வெளியிடப் போவதாக வந்த தங்கள் விளம்பரத்தைக் கண்டு நாங்கள் கவும் மகிழ்ந்தோம். உங்கள் ணிகர முயற்சியை என்றும் குன்ரு வாசகர்களின் சார்பில் வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்,
கி. நாராயணசாமி,
ஏ. ரேங்கசாமி,
பி. குப்புசாமி,
(பீகார், சிந்திரி தமிழன்பர்கள்)

★

பசுமலை.
3—8—55

ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்.

தங்களின் 22-7-55 முரசொலி இதழில், 'மகாபாரதம்-கற்பு காத்த கட்ட'த்தில், நாரதர் சொல்படி பாண்டவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிள்ளையாக, ஐந்து பேருக்கும் ஐந்து பிள்ளைகள் பிறந்ததாக காட்டியிருக்கிறீர்கள்.

மேலே கண்டது உண்மையானுல், தாங்கள் தயவுசெய்து மகா பாரதத்தில், எந்த பருவத்தில்-எந்த அத்தியாயத்தில்—எந்த சருக்கத்தில் அந்த விபரம் உள்ளது என்பதை தயவு செய்து விளக்கமாக தெரியப் படுத்த வேண்டுகிறோம்.

—மா. காசிராஜன்,
—வ. ரெகுபதி,

[மகாபாரதம் ஆதி பருவத்தில்—இந்திரப் பிரஸ்த சருக்கத்தில் —'உப பஞ்ச பாண்டவர் உற்பவம்' என்ற தலைப்பு கொண்ட அத்தியாயத்தில்— பாண்டவர் ஐவருக்கும், ஐவர் பிறந்த கதை இருக்கிறது. தோழர்களைப் பார்க்க வேண்டுகிறோம்.

—[ஆசிரியர்.]

★

மதுரை
6—8—55

தங்கள் பத்திரிகையில் சில வாரங்களாக "குறளோவியம்" வராமலிருப்பதுகண்டு மிகவும் வருந்துகிறேன். அது இல்லாதது கண்டு ஏமாற்ற மடைந்து வருகிறேன். ஆகையால் இனிமேலாவது திருவள்ளுவரின் சிறப்பினை வாராவாரம் சிறப்பிப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

—மு முத்துச்சாமி

★

தேனி
27—7—55

முரசொலி வெளிவந்த நாளிலிருந்து நாங்களும் படித்துத்தான் வருகிறோம். முரசொலி அடுப்படி வரை முழங்குகிறது என்று கூறியிருந்தீர்கள். ஆம். அதுஉண்மை. ஆனுல், நீங்கள் அந்த 'அடுப்படி அங்கத்தினர்'களின் நலனை மறந்து விட்டீர்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மை. அண்ணு! முரசொலியில் 'மாதர் பகுதி' அவசியம் சேர்க்க வேண்டுமென்பதை கனிவுடன் கூறுகிறோம்; துணிவுடன் வெளியிடுக!

—மு. ச. கலைமணி
—சி. ஏ. இன்பவல்லி

★

கணியூர்
27—7—55

உங்கள் பத்திரிகையை வாரம் தவருது படிக்கும் நேயர்களுள் நானும் ஒருவள். நான் உங்கள் பத்திரிகையில் மிகுந்த பற்றுடையவள். என் அன்பு சகோதரி ஒருவர் சொன்ன மாதிரி 'மாதர் பகுதி' மிக அவசியம் வேண்டும். சீக்கிரம் இதைக் கவனிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

—கே. ஏ. ராஜலட்சுமி

## கற்பனைக் கமிட்டியின்....

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

நிமிஷம் சேர்ந்துவரும் குப்பைகளை ஒன்று திரட்டி, அவைகளை உரமாக மாற்றியமைக்கும் தொழிற்சாலை யொன்று நிறுவ வேண்டுமென்று இந்தக்கமிட்டி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

★★ வேண்டுமானுல் இந்த உர உற்பத்தி சாலையை ரஷ்ய உதவியோடு ஆரம்பிக்கலாம். இந்திய சர்க்கார் எப்போதும் கடைப்பிடிக்கும் கொள்கைக் கேற்ப இந்தத் தொழிற்சாலையையும் தென்னுட்டில் அமைக்காமல், வடக்கேயே நிறுவவேண்டுமென்றும் நாங்கள் ஆவல் படுகிறோம்.

★★ சினிமா சங்கீதத்தை ஒழித்து, கர்நாடக சங்கீதத்தை எந்தவழியிலும் பரப்புவதென்று நமது ரேடியோ அமைச்சர் கேஸ்கர் சபதம் ஏற்றிருக்கிருரல்லவா? அவரது சபதத்தை நிறைவேற்ற மூன்ரும் வகுப்பில் நிறைய இடமிருக்கிறது.

பொதுவாக மூன்ரும் வகுப்புப் பெட்டிகளில் நடைபெற்று வரும் சண்டை சச்சரவுகள் மிகவும் சுவைமிக்கதாகும். ஒரு ஒலிப்பதிவு இயந்திரத்தை ஒவ்வொரு வண்டியிலும்இணைத்து, அங்கு நடைபெறும் கோஷ்டி சண்டைகளை அகில இந்திய ரேடியோவில் ஒலிபரப்பினுல், கர்னுடக சங்கீதத்தைவிட அதிகமாக மக்கள் இதை ரசிப்பார்களென்று இந்தக் கமிட்டி நம்புகிறது.

இந்த முறை அமுலுக்கு வந்தால்தான் 'ரேடியோசிலோ'னின் அட்டகாசம் ஒழியுமென்றும் நாங்கள் முடிவுக்கு வருகிறோம்.

மேற்கண்ட சிபார்சுகளை நீங்கள் யாவரும் வரவேற்பீர்கள் என்ற நம்பிக்கையோடு எங்கள் அறிக்கையை முடித்துக் கொள்கிறோம்.

ஜெய்ஹிந்த்!

## தெலுங்கு 'பராசக்தி'

இந்த மாதம் ஐந்தாம் நாள் வெளியாவதாக இருந்த தெலுங்கு பராசக்தி படம், தணிக்கையாளரின் அபரிமிதமான கத்தரிக்கோல் பிரயோகத்தால் வெளிவர இயலாமற் போய்விட்டதென அறிகிறோம். தமிழ் வசனங்களை அப்படியே மொழி பெயர்த்திருந்துங்கூட தமிழ் பராசக்தியை 'சென்சார்' செய்த அதே 'போர்டு' தெலுங்கு பராசக்தி விஷயத்தில் மட்டும் தனித் தன்மை காட்டுவது திரையுலகிற்கே வியப்பு தரும் செய்தியாயிருக்கிறது.

நீதி மன்றக் காட்சி — பராசக்தி கோயில் காட்சி— போன்ற முழுக் காட்சிகளை தணிக்கைக் குழு பலியாக்க விரும்புகிறதாம். குணசேகரின் பைத்தியக்கார நிகழ்ச்சிகள்; மற்றும் இன்றியமையாத வசனங்கள்; ஏறத்தாழ நாலாயிரம் அடிகள் (34 இடங்கள்) கத்தரிக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்படலாம் என்று தெரிகிறது. அப்படி கத்தரித்துக் கொடுத்துவிட்டால், மிச்சமுள்ள படத்தை தீயிலே போடுவதைத் தவிர. தியேட்டரிலே போட இயலாது எனவும் படம் எடுத்தவர்கள் கூறுகிருர்கள்.

பராசக்தியில் சென்சார் போர்டு ஆட்சேபிக்கும் வசனங்களைப் போலவும், கட்டங்களைப் போலவும் — வேறு சமீபத்தில் வெளியான படங்களில் வந்துள்ளன என்றும், அவை சென்சார் போர்டில் கத்தரிக்கப்படவில்லை என்றும் ஆதாரத்தோடு எடுத்துக் காட்டப்படுகிறது. தணிக்கைக் குழுவின் சென்னை கிளையிலேயே இந்தப் பிரச்சினை தீராவிட்டால், தெலுங்கு பராசக்தி கேஸ்கரின் தீர்ப்பு எனும் மரத்திலும் ஏறிப் பார்க்கும் என்று சொல்லப் படுவதோடு, "அதற்குப்பின் என்ன?" என்ற கேள்விக் குறிக்கும் இடம் வைக்கப் போவதில்லை யென்றும் விஷயமறிந்த வட்டாரத்தினர் கூறுகின்றனர்.

தெலுங்கு பராசக்தியின் உரிமையாளர்: நேஷனல் பிக்சர்ஸ் பெருமாள். ஸ்டுடியோ: ஏ.வி.எம். டைரக்டர்கள்: கிருஷ்ணன்-பஞ்சு. தமிழ்த் திரைக்கதை வசனம்: கருணுநிதி. சென்சார் போர்டு தலைவர்: சாஸ்திரி அவர்கள்!

கிளைவுக்கு விளக்கம் தேவையில்லை யல்லவா?

## கொள்கைவளர்க்கு கோபுரம்போலே!

### லால்பேட்டை

13—8—55 சனி மாலை 5மணிக்கு, தோழர் கா. ந. இராமலிங்கம் அவர்கள் தலைமையில், தோழர்கள் சிற்றரசு, பொ. சொக்கலிங்கம் ஆகியோர் பேசுவர்.

★

### சென்னை

#### திரு. வி. க. பிறந்த தின விழா

14—8—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு, திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றத்தாரால், கான்ரான்ஸ்மித் நகர் மைதானத்தில், திரு. வி. க. பிறந்ததின விழா நடைபெறும். தோழர் க. வரதன் அவர்கள் தலைமையில், தோழர்கள் என். வி. நடராசன், கவிஞர் கண்ணதாசன் ஆகியோர் பேசுவர்.

★

### ஆம்பூர்

14—8—55 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு, முகமதலி மைதானத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தோழியர் அருண்மொழி, தோழர் பசுல்—ஆகியோர் பேசுவர்.

★

### அருப்புக்கோட்டை

14—8—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு, பாண்டியன் திடலில் சௌந்திர பாண்டியனுர் நினைவுப் படிப்பக இரண்டாவது ஆண்டுவிழா தோழர் இ. ல. ம. சௌந்திர பாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெறும். பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுவார்.

★

### பொறையார்

20—8—55 சனி மாலை 6மணிக்கு, பொறையார், அழகிரி படிப்பக திறப்பு விழா பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் சி. ஜம்பு அவர்கள் தலைமையில், பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பேசுவார்கள்.

# பிறை வானம்

..பிள்ளைகள் பகுதி...



## பட்டத்தின் கதை!

சிறு கதை

❊ காற்று 'ஜிலு ஜிலு' என்று வீசிக் கொண்டிருந்தது. நேரமோ மாலை; இடமோ ஆற்றங்கரைத் திடல். கேட்க வேண்டுமா? "பாலர் பட்டாளம்" கூடியிருந்தது, பட்டங்களுடன்.

"அப்பப்பா! நான் அழகாகத்தான் இருக்கிறேன். எத்தனை கவர்ச்சி! இத்தனைப் பட்டங்களிலும் நானே ராஜா"-இப்படி முணுமுணுத்தது ஒரே ஒரு பட்டம். அழகான சிவப்புக் காகிதம்—அதிலே வட்ட வட்ட கருப்புப் புள்ளிகள்—உண்மையிலேயே அழகாகத்தான் இருந்தது அது. ஆனாலும் அதனுடைய கர்வம் கொண்ட சொற்களைக் கேட்டு மற்ற பட்டங்கள் மகிழவா செய்யும்?

"இருந்தாலும் இத்தனை கர்வம் கூடாதப்பா!"-இப்படி முணுமுணுத்தது ஒரு பச்சை நிறப் பட்டம்.

"போகட்டும்; நமக்கென்ன வந்தது?"-சண்டை பிடிக்காத வெள்ளைப் பட்டம், இப்படி சமாதானம் பேசியது.

❊ இந்தக் குரல்களைப் பையன்கள் கவனிக்கவில்லை. பட்டங்களைப் பறக்க விட்டார்கள்!

அந்த சிவப்புப் பட்டம்தான் உயர உயர பறந்து கொண்டு சென்றது. அந்தப் பட்டத்தைப் பறக்க விட்ட பணக்காரத் தம்பிக்குக் கொள்ளை மகிழ்ச்சி! பட்டத்திற்கென்று அவன் எவ்வளவு செலவு செய்திருக்கிறான்! எவ்வளவு அதிகம் நூல் வாங்கியிருக்கிறான்! அப்பா மனம் கோணாமல் பணம் கொடுப்பார்—அவனோ எந்த 'நூலோ' வாங்கிப் படிப்பதற்குப் பதிலாக—இந்த நூலை வாங்கிக் குவித்திருந்தான்!

பாவம், எவ்வளவு யோசனையில்லாத செய்கை! இருந்தாலும், அவனும் சிரித்தான். அவன் ஏற்றிய பட்டமும் சிரித்தது. சிரித்துக் கொண்டே பறந்தது; பறந்து கொண்டே உயரே ஏறியது!

"ஆகா! ராஜாவின் பட்டம்தான்'டா வானத்தைத் தொடப் போவுது"-ஆற்று மணலில் குதித்துக் கொண்டே கத்தினான் ஒரு பொடியன்.

"ஆமாண்'டா! சிவப்பு கலர்—கருப்புப் புள்ளிகள் — எல்லாம் கண்ணுக்கே தெரியாது போலிருக்கே! ஜோர்; ஜோர்!"-அதை ஆமோதித்தான் மற்றொரு வாண்டுப் பையன்.

ராஜாவுக்கு ஒரே மகிழ்ச்சி! ராஜாவின் பட்டத்துக்கோ...... கேட்க வேண்டுமா? "நானே ராஜா" என்று கத்திக் கொண்டே பறந்தது. தனக்குக் கீழே—ரொம்ப ரொம்ப அடியில் பறந்து கொண்டிருந்த மற்ற பட்டங்களைப் பார்த்தது. கேலியாக சிரித்தது. இன்னும் பறந்தது. பறந்து கொண்டேயிருந்தது.

❊ மாலை மங்கிக்கொண்டு வந்தது!

எல்லாப் பட்டங்களையும் இறக்கினார்கள் சிறுவர்கள். ஆனால் ராஜாவுக்கோ...தன் பட்டத்தை இறக்கவே மனமில்லை. இன்னும் நூலை விட்டுக்கொண்டேயிருந்தான். அதைப் போலத்தான் அவனது பட்டத்திற்கும்! கீழே இறங்கவே மனமில்லை!

வான வெளியில் தன்னிச்சையாய்—துணை யாருமின்றி—'ராஜா'வைப் போலவே பறந்துகொண்டிருந்த அப் பட்டம், திடீரென்று எதையோ கண்டு திகைத்தது; உற்று கவனித்தது. அதை நோக்கிப் பறந்துகொண்டு வந்தது ஏதோ ஒன்று. பட்டமோ என்று பார்த்தது. அல்ல; அல்ல! அது ஒரு ஊர்க்குருவி. கொட்டைப் பாக்கைப் போலிருந்த சின்னஞ் சிறிய குருவி!

தான் பறக்கும் உயரத்திற்குப் பறந்து வந்த குருவியைப் பார்த்ததும், பட்டத்திற்குப் பொருமை பொங்கியது. "யாரப்பா நீ?" — சற்று இறுமாப்புடன் கேட்டது.

"யாரா யிருந்தால் என்ன? உனக்கு புத்தி சொல்லவே வந்தேன். சீக்கிரம் இறங்கிவிடு. காற்று பலமாக வீசும்போல் தெரிகிறது!"—இப்படி சொன்னது ஊர்க்குருவி.

பட்டம் 'பக பக'வென்று சிரித்தது. "அட முட்டாளே! என்னை இறங்கச் சொல்ல நீ யார்? இவ்வளவு பெரிய எனக்கு, கடுகளவு நீ புத்தி சொல்வதா? விந்தை; விந்தை! நான் இன்னும் பறப்பேன். வேண்டுமானால் வந்து பார், என்னுடன் 'போட்ட'க்கு!" மீண்டும் சிரித்தது பட்டம்.

"போட்டிக்கா வருகிறாய், முட்டாள் பட்டமே! நூலும் காற்றும் இல்லாவிட்டால் நீ பறக்க முடியாது; தெரியுமா? ஆனால் நானோ..."

தன்னை அவமானப் படுத்துவதாக எண்ணிவிட்டது பட்டம். தன்னுடைய அகண்ட உருவத்தை வேகமாக அசைத்தது. ஊர்க்குருவியைநோக்கி நகர்ந்தது. அடித்தது. "போடா தம்பி! உன் புத்தியும் யுக்தியும் யாருக்கு வேண்டும்? இந்த வானவெளியில் நானே ராஜா!" என்று கத்தியது.

அடியின் வலி தாங்காத ஊர்க்குருவிக்கு அழுகையே வந்து விட்டது. கீழே இறங்கியது. பறந்தது.

"ஓடுடா...ஓடு..."—பட்டம் சிரித்துக் கத்தியது.

❊ காற்று வேகமாக வீசியது. இருள் படர்ந்தது. ஆற்று மணல் காற்றிலே பறந்தது. கண்ணுக்குள் புக முயற்சித்தது!

ராஜா தன் பட்டத்தை வேகமாக கீழே இறக்க முயன்றான். இரண்டு மணி நேரத்தில் மேலே ஏற்றிய பட்டமாயிற்றே. அவ்வளவு சுலபத்திலா இறக்கிவிட முடியும்?

காற்று 'ஹோ' என்ற இரைச்சலுடன் வீசியது. "ஆ... ஊ..." என்று கத்திக் கொண்டே பையன்கள் ஓடிவிட்டார்கள். ராஜா மட்டும் தனியாக நின்று, நூலை சரசரவென்று இழுத்துக் கொண்டிருந்தான்.

❊ அங்கே... வானத்தில்...

பட்டம் தடுமாறியது. அங்குமிங்கும் ஆடியது. அலைக்கழிந்தது. பட்டத்தால் தாங்க முடியவில்லை. 'ஐயோ' என்று அலறியது. என்ன பலன்? ராஜாவால் அதைக் கீழே இறக்க முடியவில்லையே!

புழுதி பறந்தது. சருகுகள் மிதந்தன. புயலைப் போல் மாறியது காற்று!

'சடா'ரென்று அறுந்தது பட்டத்தின் நூல்! 'ஐயையோ' என்ற அலறலுடன் கவிழ்ந்தது பட்டம். வானத்திலே ஓடியது. அலறிக் கொண்டே ஓடியது. எங்கேயோ ஓடியது!

காற்றின் வேகத்தில் காகிதமெல்லாம் கிழிந்தது. ஆமாம்; பட்டத்தின் அழகு அழிந்தது. உடலெல்லாம் காயங்கள்!

❊ நன்றாக இருட்டி விட்டது. குற்றுயிர்—குறை உடல் இந்தக் கோலத்தில் பட்டம் ஒரு மரக் கிளையில் சிக்கியது. "ஐயோ... ஆ..." என்று அழுதுகொண்டே தொங்கியது.

அதே சமயம் அங்கு ஏதோ ஒரு குரல் எழும்பியது. பட்டம் தூக்க முடியாமல் தன் தலையைத் தூக்கிப் பார்த்தது. ஒரு குருவிக் கூண்டு. அதிலே ஒரு ஊர்க்குருவி. பக்கத்தில் அதன் குஞ்சுகள்! பட்டத்திற்கு 'திக்'கென்றது. ஏன் தெரியுமா? சற்றுநேரத்திற்கு முன்பு யாரிடம் சவால்விட்டதோ, அதே ஊர்க்குருவிதான் அது!

அந்த சமயத்தில், "ஏனம்மா! நம்மால்தான் வானத்தில் உயரப் பறக்க முடியும் என்கிறாயே தம்பி, உண்மையா?" என்று கேட்டது ஒரு குருவிக் குஞ்சு.

ஊர்க்குருவி பேசியது. "அப்படி இல்லையம்மா! அந்த கர்வமும் கூடவே கூடாது! இன்னும் கருடன், பருந்து.. எத்தனையோ.." பேசிக் கொண்டிருக்கும் போதே பரிதவித்துக் கொண்டிருந்த பட்டத்தைப் பார்த்து விட்டது ஊர்க்குருவி. மீண்டும் தன் குஞ்சுகளிடம் பேசியது: "அதோ பார், அந்தப் பட்டத்தை...கர்வத்தால் அழிந்த..."

ஊர்க்குருவி முடிக்கவில்லை. "வேண்டாம்; வேண்டாம்! என் கதையைச் சொல்லாதே!" என்று கத்தியது பட்டம்.

அதே சமயம் வேகமாக காற்று அடித்தது. பட்டம் கிளையை விட்டு விடுபட்டது. கீழே ஓடிக் கொண்டிருந்த ஆற்று வெள்ளத்தை நோக்கி ஓடியது. ஆற்றில் விழுந்தது. குலைந்தது.

❊ "ஐயோ! சாகிறேனே!" என்ற மரணக் குரல் மட்டும் ஊர்க்குருவி குடும்பத்தின் காதுகளில் விழுந்தது.

—சொர்ணம்

## ஏன் சிரித்தாள்?

● மணியரசியின் அழகிய முகத்தில் சிரிப்புத் தவழ்ந்தது. புத்தகத்தை கவனிப்பதன் மூலமாகத் தன் சிரிப்பை அடக்கத்தான் முயன்றாள். சிரிப்புக்குக் கூடவா அணை போட முடியும்? பயனில்லை. போகட்டும்; அவள் அப்படிச் சிரிக்கக் காரணம் தான் என்ன? அதைத் தெரிந்து கொண்டு நாமும் அவளுடன் சேர்ந்து சிரிப்போமே!

● மணியரசியின் அம்மா பழமையில் தீராத நம்பிக்கையுடையவர். அதற்குமேல் அவளுடைய பாட்டி. அம்மா சற்றுத் திருந்தினாலும், பாட்டி அதைத் தடை செய்து விடுவார்.

வீட்டை சுத்தம் செய்வதென்றால்கூட, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை இவைகள் கூடாது! அந்த நாட்களில் அசுத்தத்தை நீக்கினால், வீட்டில் உள்ள 'லட்சுமி' வெளியேறி விடுவாளாம்! 'அதிர்ஷ்ட'மே அழிந்து விடுமாம்! அவ்வளவு பழமை வாதிகள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

● ஒருதினம் மணியரசி, ஆடைகள் வைத்திருக்கும் 'பீரோ'வைத் திறந்தாள். அப்போது, அதனுள் சிறைப்பட்டிருந்த ஒரு கரப்பான் பூச்சி, விடுதலை அடைய வெளியே ஓடிவந்தது. மணியரசி உடனே அதை அடிக்கப் போனாள். ஆனால், அப்போது அங்கு வந்த அவளுடைய அம்மா, "அடடா... மணி! அதை அடிக்காதே. அது அதிர்ஷ்டப் பூச்சி!" என்றார்.

"அடிக்கா விட்டாலும் அதை 'பீரோ'விலிருந்து விரட்டி விடுகிறேன் அம்மா. இல்லாவிட்டால், அப்புறம் துணிகளை பாழாக்கிவிடும்" என்றாள் மணியரசி.

இதற்குள் பாட்டியும் அங்கு வந்தாயிற்று. "ஐயோ! 'தனப் பூச்சி'யை யாராவது அடிப்பார்களா? அது வீட்டிலிருந்தாலே அதிர்ஷ்டமாயிற்றே!" என்றார்.

அவர்கள் இவ்வாறு வாதம் புரிந்து கொண்டிருந்தார்கள். ஆனால் அதுவரையில் காத்திருக்குமா, அந்தச் சிறுபூச்சி? அது துணிகளின் அடியில் எங்கோ ஒளிந்து கொண்டது.

மணியரசி அதைத் தேடினாள். ஆனால் மற்ற இருவரும் அவளை அதற்கு அனுமதிக்கவில்லை.

● இது நடந்து இரண்டொரு வாரங்கள் கழிந்த பின், ஒரு நாள், மணியரசியின் அம்மா அந்த 'பீரோ'வில் உள்ளத் துணிகளை ஒழுங்காக மடித்து வைக்க எடுத்தார்.

அப்போதுதான் 'தனப்பூச்சி'யின் தகிடுதத்தத்தைக் கண்டார்! விலையுயர்ந்த துணிகளை எல்லாம் வட்ட வட்டமாகக் கடித்து விட்டிருந்தது அந்த 'அதிர்ஷ்ட'ப் பூச்சி! அழகான உடைகள் எல்லாம் பாழ்; பாழ்! பாவம்! எப்படியிருக்கும் அம்மாவுக்கும் பாட்டிக்கும்! ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

மணியரசிக்கு துணிகள் பாழடைந்ததைக் குறித்து வருத்தம் தான்; இருந்தாலும் அவர்களுடைய மூடநம்பிக்கைக்கு நல்ல பரிசு கிடைத்ததல்லவா, அது குறித்து மகிழ்ந்தாள்; ஆகவேதான் சிரித்தாள்.

—மு. கற்பகம்

# 'எழுத்தாணி'

சுயம்புநாதன்; திருச்சி.

[?] விடுதலையில் தலையங்கமும், குத்தூசியும் நம்மைப்பற்றி அவதூறான முறையில் உண்மைக்கு மாறாக எழுதப்படுகிறதே. ஏன்?

நம்மைப்பற்றி மட்டுந்தானா? பெரியார் அவர்களைப் பற்றியே அப்படி எழுதப்படுகிறது—என்று பெரியார் அவர்களே விடுதலையில் அறிக்கை விட்டிருக்கிறாரே; அந்த சங்கதி தெரியாதா உமக்கு?

(●) பத்மநாபன்; மேட்டுப் பாளையம்.

[?] ஊமைகளுக்காக செவிடர்களிடம் பேசுபவர்கள் யார்?

இது தெரியாதா? கோவில் அர்ச்சகர்கள்!

சி. ஏ. முத்துராமன்; திருவாரூர்.

[?] தற்பெருமை இல்லாதவர்கள் யார்?...

நானும் ஒருவன் என்று கூறுவேன். அப்படிச் சொல்வதே ஒரு தற்பெருமையாக இருக்குமென்பதற்காகச் சொல்லாமல் விடுகிறேன்.

கே. கே. ஈஸ்வரி; திருவல்லிக்கேணி.

[?] கடலில் பெய்யும் மழைக்கும்—கடவுளுக்கு செலுத்தப்படும் காணிக்கைக்கும் உள்ள வேறுபாடு என்ன?

கடலில் டெய்த மழை சூரிய வெப்பத்தால் ஆவியாக மாறி, மேகமாகி மீணடும் மழையாக மாநிலத்தில் பொழியும். கடவுளுக்குத் தந்த காணிக்கையோ, கோயில் பெருச்சாளிகள் வீட்டிலே நகையாக, சேலையாக மாறி நிற்கும்!

சுல்தான்; சென்னை-13.

[?] நேருவுக்குப் பின் இந்துஸ்தானம் எப்படியிருக்கும்?

ஜின்னாவுக்குப் பின் பாகிஸ்தான் போல!


## தேவை

'முரசொலி' அலுவலகத்திற்கு, பத்திரிகைத் துறையில் அனுபவம் பெற்ற ஓவியர் ஒருவர் தேவை. மாதிரி ஓவியங்களுடன் உடனே தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

—நிர்வாகி.


துரை. முருகேசன்; காரமடை.

(?) சிந்தனையைக் கடன் கொடுப்பது யார்?

விஞ்ஞானிகள்.

சுகதாசன்; அரகண்டநல்லூர்.

(?) கவலைக்கும் பெருமூச்சுக்கும் உள்ள சம்பந்தம் என்ன?

ஆச்சாரியாருக்கும் தோல்விக்கும் உள்ள சம்பந்தம்தான்!

(?) காதல் யாருக்குக் கசக்கும்?

ஏமாற்றம் கண்ட காய்ச்சல்காரர்களுக்கு!

(?) பண்பு என்பது என்ன?

நேரு மேடையேறியதும் மறந்துவிடுவாரே அதுதான்!

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:

(●) நி. பத்மநாபன்,
மேட்டுப்பாளையம்,
(நீலகிரி)

(?) கற்பனைக்கும் கனவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

சிந்திக்கும்போதெல்லாம் கற்பனை செய்யலாம்; ஆனால், தூங்கும் போது மட்டும்தான் கனவு காணலாம்!

(?) உம்மால் சகிக்க முடியாதது ஏதாவது உண்டா?

உண்டு; கேஸ்கர் இயக்கும் ரேடியோ!

(?) பரபரப்பு என்பது என்ன?

தேர்தல் முடிவு தெரியும்வரை அபேட்சகன் மனதில் குடியிருக்கும் ஒரு தன்மை!

(?) பசி முதலிய கவலைகள் வராமலிருக்க வழி என்ன?

ஒன்று சாகவேண்டும்; இல்லாவிட்டால் காங்கிரஸ் மந்திரியாக வேண்டும்!

(?) மறதியைப் போக்க ஒருவழி சொல்லுங்கள்?

எப்போதும் நினைத்துக்கொண்டே இருங்கள்!

சக்திவேல்; திருவாரூர்.

(?) 'காங்கிரஸ்' என்கிற தொடர் நாடகத்தின் முடிவு எப்படிப் பட்டதாக இருக்கும்?

ஒன்று திடீரென்று 'சீன்' அறுந்து விழுந்துவிடும்; இல்லையேல் நடிக்கிறவர்களே நாடகத்தையும் ரசித்துத் தீரவேண்டிய பரிதாப நிலைமை ஏற்படும்!

க. ராசு; கடலூர்.

(?) ஆணுக்காக பெண் உண்டாக்கப்பட்டாளா? அல்லது பெண்ணுக்காக ஆண் உண்டாக்கப்பட்டானா?

ஒருவருக்காக ஒருவர் உண்டாக்கப்படவில்லை; இருவரும் மூன்றாவது பொருளான 'வாழ்க்கை'க்காகவே சிருஷ்டிக்கப்பட்டார்கள்!

மதிவதனன்; மேட்டுப்பாளையம்.

(?) ராஜாஜி காங்கிரசின் தலைவராக வந்திருந்தால்...?

அப்போதும் அவர் காமராசரை விரட்ட முடியாது!

ம. சித்துராசன்; வேம்படிதாளம்.

(?) நண்பர்கள் என்றால் யார்?

அடிக்கடி 'கைமாத்து' கேட்பவர்கள்; ஆபத்துக் காலத்தில் அருகே வராமலிருப்பவர்கள்; அழும்போது கண்களைத் துடைக்க வராமல், சிரிக்கும் போது பங்கு கேட்பவர்கள்;—இப்படியும் சிலர் பொருள் சொல்வார்கள்!

(?) உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் மற்றொன்றும் வைத்து பேசுவோரை நம்பினால் என்ன ஏற்படும்?

இராமசாமி படையாச்சியாரை நம்பி இப்போது நட்டாற்றில் தவிக்கும் வன்னியப் பெருமக்களின் நிலைமை ஏற்படும்!

என். பிச்சு; அரகண்டநல்லூர்.

(?) அதிகாரத்திற்கும், குடும்ப பாரத்திற்கும் உள்ள வித்யாசம் என்ன?

முன்னதில் 'காரம்' இருந்தாலும் போதை அதிகம்!

த. பாலு; சென்னை-7

(?) காங்கிரசின் குழந்தை எது?

அரசியற் துறையிலே லஞ்சம்! சமுதாயத் துறையிலே பஞ்சம்!

(?) கூடுவிட்டு கூடு பாயும் தன்மைக்கு உவமை யார்?

உயர்வாகச் சொல்லப் போனால் கிருஷ்ணமேனன்; இல்லாவிட்டால் சென்னையிலிருக்கும் சில மந்திரிகள்!

சி. பங்கிராஸ்; மணக்காவிளை. (தென் திருவிதாங்கூர்)

(?) வீட்டினுள் சாக்கடையும், சுற்றுப்புறம் பூந்தோட்டமும் அமைக்க நினைப்பவர் யார்?

சமுதாய — மதப் பிரச்னைகளில் தங்கள் பார்வையைச் செலுத்தாத கட்சியை இப்படியெல்லாம் கேலி செய்யாதீர்கள்!

ம. சந்தர்; கத்தோரை தேயிலைத் தோட்டம்.

(?) நாட்டிற்கும் ஏட்டிற்கும் எத்தகைய தொடர்பு வேண்டும்?

ஏடுகள் நாடு இருக்கிற நிலையை எடுத்துக்காட்டி, இருக்கவேண்டிய நிலையையும் படம் பிடித்துக் காட்டவேண்டும்.

பிச்சு; அ. நல்லூர்.

(?) நேரு எதைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்?

கதர்க் குல்லாயை—காங்கிரசை!

ச. சிவபாதம்; எழும்பூர்.

(?) உலகத்திலேயே மிக உயரமான கட்டிடம் எது? மிகப் பெரிய வாசகசாலை எது?

மிக உயரமான கட்டிடம் மனக்கோட்டை! மிகப்பெரிய வாசகசாலை சிந்தனையாளர்களின் மூளை!


13-8-55 சனி இரவு 10-மணிக்கு
கல்லக்குடியிலும்,
14-8-55 ஞாயிறு மாலை 6 30 மணிக்கு
திருச்சி தேவர் மன்றத்திலும்,
இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் நடிக்கும்

மு. க. வின்
★ மணிமகுடம் ★

நடிகர்கள் :— எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். என். கிருஷ்ணன், பி. எஸ். வெங்கடாசலம்.
மனோரமா, குமாரி, நிர்மலா.

கட்டணம் : 3, 2, 1, அணா 8.

எமது அடுத்த நாடகம் : தயாராகிறது !
கட்டபொம்மன்


ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.